# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲கூஅகூ<br>விளம்பி, கார்த்திகை<br>1958 நவம்பர், டிசம்பர். | மலர் |
|---|---|---|
| ௩௪ | | அ |


## பண்டைத் தமிழர் சமயம்.


சாமி. சிதம்பரனர்.



(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)


இன்று தமிழர்கள் பல சமயங்களைப் பின்பற்றி நிற்கின்றனர். சைவம், வைணவம், புத்தம், சமணம், இஸ்லாம், கிறிஸ்துவம் போன்ற பல சமயங்கள் தமிழர்களை ஆட்கொண்டிருக்கின்றன. இஸ்லாமும் கிறிஸ்துவமும், நமது நாட்டில் புகுவதற்கு முன், சைவம், வைணவம், புத்தம், சமணம் ஆகிய சமயங்கள் தமிழகத்தில் நிலவின.

இவற்றுள், புத்தமும், சமணமும் வட நாட்டிலிருந்து தென்னாட்டில் குடி புகுந்தவைகளே. புத்தம், சமணம் தென்னாட்டில்—தமிழகத்தில்—குடி புகுவதற்குமுன், சைவமும், வைணவமும் இன்றுள்ள நிலையில்தான் தமிழகத்தில் இருந்தனவா? அல்லது வேறு நிலையில் இருந்தனவா? என்பவை ஆராயத்தக்கவை.

புத்தம், சமணம், தமிழகத்தில் பரவுவதற்குமுன், சிவ வணக்கம், திருமால் வணக்கம் தமிழ் மக்களிடம் இருந்தன. இதில் ஐயத்திற்கு இடம் இல்லை. ஆனால், இன்றிருப்பதுபோன்ற சைவ, வைணவ மத தத்துவங்கள் இருந்தனவென்று எண்ண இடம் இல்லை.

ஆனல் வேதக் கொள்கைகள் தமிழகத்தில் பரவியிருந்தன; வேதங்களில் கண்ட தெய்வங்கள் பரவியிருந்தன; வேத விதிகள் பலவற்றைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். வேதத்தையும், உபநிடதங்களையும் ஆதரவாகக்கொண்ட மத தத்துவங்கள் எல்லாம் புத்த—சமண மதங்களுக்குப் பின்னர் எழுதப்பட்டனவென்றே கூறுகின்றனர்.

புத்த—சமண மதங்களுக்கு முன்னே தமிழரிடம் இருந்த மதம்—சமயம் யாது? என்று தெளிவாகக் கூறமுடியவில்லை. சமயங்களுக்கான அடிப்படைத் தத்துவங்கள் தமிழரிடம் இருந்தன. சங்க நூல்களிலே இவற்றைத் தெளிவாகக் காணலாம்.

### உயிர் உடல்.

ஆன்மா வேறு, உடல் வேறு என்ற கொள்கை மத உண்மைகளுக்கு அடிப்படையாகும். இந்த உணர்ச்சியின்மீதுதான் மத

தத்துவங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மக்கள், மறுவுலகத்தைப் பற்றிச் சிந்திப்பதற்குக் காரணம் இந்த உணர்ச்சிதான்; புண்ணிய பாவங்களைப்பற்றி, நல்வினை தீவினைகளைப்பற்றி, பிறப்பு இறப்புக் களைப்பற்றி எண்ணிப் பார்ப்பதற்கு இந்த உணர்ச்சிதான் காரணம்.

ஆன்மா வேறு, உடல் வேறு என்ற எண்ணம் தமிழ் மக்க ளிடம் எந்தக் காலத்தில் பிறந்தது என்று கூற முடியாது. எழுத் துக்களை உயிர் எழுத்து, மெய்யெழுத்து என்று பிரித்த காலத்திற்கு முன்பே இந்த உணர்ச்சி பிறந்திருக்கவேண்டும்.

உயிர் தனித்து இயங்குவது; உடல் தனித்து இயங்காது; உயிர் சேர்ந்தால்தான் உடல் இயங்கும். இவ்வுண்மையைக் கருத் தில் கொண்டே தனித்து இயங்கும் எழுத்துக்களுக்கு உயிர் எழுத்து என்று பெயரிட்டனர்; தனித்து இயங்காத எழுத்துக்களுக்கு உடல் என்ற பொருளில் மெய் என்று பெயரிட்டனர்; உயிர் சேர்ந்தால் தான் உடல் இயங்கும் என்ற பொருளில் உயிர்மெய் எழுத்துக்களுக் குப் பெயர் வைத்தனர். இந்த உண்மை சிந்திக்கத்தக்கது.

## ஊழ்வினை.

சங்க காலத்திற்கு முற்பட்ட தமிழரிடம் ஊழ்வினையிலே நம் பிக்கை உண்டு. இந்த உண்மையைத் தமிழ் நூல்களில் விரிவாகக் காணலாம்.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

"ஒரே நிலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம்; அல்லது வெவ்வேறு நிலத்தைச் சேர்ந்தவராக இருககலாம். உருவிலும், திருவிலும் ஒத்த இரு ஆண் பெண்கள் முன் செய்த வினையால் ஒருவரை ஒருவர் காண்பர்; காதலிப்பர்; பெண்ணைவிட ஆண்மகன் சிறந்தவனுயினும் கொள்ளத்தகும்" என்பதே இதன் பொருள்.

இச்சூத்திரம் தொல்காப்பியக் களவியல் சூத்திரம்; ஒரு ஆணும், பெண்ணும் முதலில் சந்தித்துக் காதல்கொள்வதைப்பற்றிக் கூறுவது. இச்சூத்திரத்தில் இருவர் சந்தித்துக் காதல்கொள்ளுவ தற்குக் காரணம் அவர்களுடைய முன்வினைதான் என்று கூறியிருப் பது குறிப்பிடத்தக்கது. பால் என்பது ஊழ்வினையை — முன் வினையை — தலைவிதியைக் குறிக்கும் சொல். இதனுல் தொல்காப்பிய காலத்திலே தமிழ் மக்களிடம் ஊழ்வினையைப்பற்றிய நம்பிக்கை நிலவியிருந்ததைக் காணலாம்.

"வானம் தண்துளி தலைஇ ஆனது
கல்பொருது இரங்கும் மல்லல்பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம். (புறம் 192)

வானம் மழை பெய்தலால், தடையின்றிக் கல்லிலே மோதி ஒலித்துக்கொண்டு ஓடும் வளம் பொருந்திய பெரிய ஆற்றிலே, நீரோட்டத்தின் வழியே செல்லும் தெப்பத்தைப் போன்றது உயிர்; அரிய உயிரானது ஊழின் வழியேதான் செல்லும்; இதை, அறிஞர்களின் நூல்களின் வழியாக அறிந்திருக்கின்றோம்'' என்பது புறநானூறு.

இந்த ஊழைப்பற்றி வள்ளுவர் ஊழ் என்றே ஒரு அதிகாரம் கூறியிருக்கின்றார். பின்னல் எழுந்த எல்லா நூல்களும் ஊழ் வினையைப்பற்றியே கூறுகின்றன. ஊழ்வினை தன் பலனைக் கொடுத்தே தீரும்; ஊழ்வினையின்படிதான் எல்லாம் நடக்கும் என்பதை வலியுறுத்தாதவர்கள் இல்லை.

## மறு உலகம்.

இறந்தபின் செல்லக்கூடிய உலகம் ஒன்று உண்டு; இவ்வுலகில் நன்மை செய்தவர்கள் மறு உலகிலே இன்பம் துய்ப்பார்கள்; இவ்வுலகிலே தீமை செய்தவர்கள் மறுவுலகிலே துன்பத்தை அடைவார்கள். இத்தகைய நம்பிக்கையும் சங்க காலத்துக்கு முற்பட்ட தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவினை வாணிகன் ஆய் அல்லன் (புறம் 134)

இப்பிறப்பிலே செய்தது ஒன்று, மறு பிறப்பிற்கு உதவும் என்று எண்ணி, ஒரு பொருளைக் கொடுத்து, அறத்தை விலைக்கு வாங்கும் வணிகன் அல்லன் ஆய் என்பவன்''

இப்புறநானூற்று அடிகள் மறுவுலக வாழ்வைச் சுட்டிக் காட்டுகின்றன.

மறுமையில் இன்பம் அடையும் உலகத்தைத் துறக்கம் — சுவர்க்கம்—என்று கூறுவர்.

பெறற்கு அரும் தொல்சீர்த் துறக்கம்

என்று, பெரும்பாணாற்றுப்படையும், பட்டினப்பாலையும் கூறுகின்றன. "பெறுவதற்கு அரிய இன்பங்கள் நிறைந்த பழமையான பெருமையுள்ள சொர்க்கம்'' என்று இவ்வாறு பாராட்டப்பட்டுள்ளது சொர்க்கம்.

துன்பந்தரும் உலகத்தை நரகம் என்று கூறுவர். இத்தகைய உலகம் உண்டென்றும் தமிழர்கள் நம்பி வந்தனர்.

"நிரயம் கொள்பவரொடு ஒன்றாது (புறம் 5)

"நரகத்தையே தமக்கு இடமாகக் கொள்கின்றவருடன் சேராமல்'' என்ற புறநானூற்று அடி நரகம் ஒன்று உண்டென்பதை விளக்கிற்று.

## மறு பிறப்பு.

மறு பிறப்பைப் பற்றிய நம்பிக்கையும் தமிழரிடம் குடிகொண்டிருந்தது. பிறப்புக்கள் பல உண்டு என்று நம்பினர். மறு பிறப்பு

இல்லை என்ற கொள்கையும் சங்ககாலத் தமிழரிடம் குடிகொண்டிருந்ததாகத் தெரிகின்றது.

இறந்தபின் அடையும் மறு உலகம் உண்டு; இவ்வுலகில் அவரவர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி மறு உலகில் இன்ப துன்பங்களை நுகர்ந்துதான் ஆகவேண்டும்: இக்கொள்கைகளை எல்லா மதங்களும் ஒப்புக்கொள்ளுகின்றன.

ஆனால், இறந்த உயிர் மீண்டும் இவ்வுலகில் பிறக்கிறதா? என்பதில் சமயங்களுக்குள் மாறுபட்ட கருத்துக்கள் உண்டு; பழமையான சமயங்கள் எல்லாம் இறந்தபின் பிறப்பு உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகின்றன; ஒரு உயிர் அதன் செயலுக்குத் தக்கபடி எண்ணரிய பிறவிகள் எடுக்கின்றன என்பதே சைவ வைணவ மதக் கொள்கை; புத்த சமணங்களும் இதை ஒப்புக்கொள்ளுகின்றன. கிருஸ்துவ — இஸ்லாம் சமயங்கள் மறு பிறப்புக் கொள்கையை ஒத்துக்கொள்ளவில்லை.

தமிழர்களிடம் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பே இத்தகைய இரு வகையான முரண்பட்ட கருத்துக்கள் நிலவியிருந்தன என்பதைக் காண நமக்கு வியப்புண்டாகின்றது.

புறநானூற்றின் 214வது பாடல் குறிப்பிடத்தக்கதொரு சிறந்த பாடல். மறு பிறப்பு உண்டு என்னும் கொள்கையும், இல்லை என்னும் கொள்கையும் அப்பாடலில் காணப்படுகின்றது. இது சிறந்த கொடை வள்ளலாகிய கோப்பெருஞ் சோழன் பாட்டு.

"அறிவற்றவர் — தெளிந்த அறிவில்லாதவர்தான் நல்வினையைச் செய்யலாமா? வேண்டாமா? என்று சந்தேகப்பட்டுக் கொண்டேயிருப்பார்கள்.

"யானையை வேட்டையாடுவதற்குத் துணிந்து செல்கின்றவன் வெற்றிபெறுவான்; யானையை எளிதிலே பெறுவான்; குறும்பூழ் என்னும் சிறிய பறவையை வேட்டையாடச் செல்கின்றவன், துணிவின்மை காரணமாக அதைப் பெறுமல் திரும்புவதும் உண்டு.

"அதனால், உயர்ந்த எண்ணத்தை உடைய உயர்ந்தவர்கள் தாம் செய்த நல்வினையின் பயனை அடைய முடியும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள்; ஆதலின் அவர்கள் துறக்கத்திலே இன்பத்தை அனுபவிக்கவும் கூடும்.

"நன்மை செய்து, துறக்கத்தின் இன்பத்தை நுகர முடியாதவராயின், அவர்கள் மீண்டும் இவ்வுலகிலே பிறந்து துன்பத்தை அடையவும் கூடும்.

"மாண்டவர் மீண்டும் பிறப்பதில்லை என்று சொல்லுவார்களாயினும், அதில் நம்பிக்கை கொள்ளுவாராயினும், நன்மை செய்தல் சிறந்ததாகும். இமயத்தின் சிகரத்தைப்போலத் தமது புகழைப் பெரிதாக இவ்வுலகிலே நிலை நிறுத்திப் பழியற்ற உடம்புடன் வாழ்ந்து இறப்பதுதான் மிகச் சிறந்ததாகும்" என்பதுதான் அப்பாடலின் பொருள். அப்பாடல் வருமாறு:—

செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அருஅர் கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவுஇல் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே;
குறும்பூழ் வேட்டுவன் வறும்கையும் வருமே;
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல்உண்டு எனில்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்.
தொய்யா உலகத்து நுகர்ச்சிஇல் எனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்;
மாறிப் பிறவார் ஆயினும், இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம்இசை நட்டுத்
தீதுஇல் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே.

இதுவே அப்பாடல். "நன்மையுண்டு என்னும் துணிவுடன் நன்மை செய்பவர் துறக்கத்தில் சென்று இன்பம் நுகர்வர்; அத் துணிவில்லாதவர் பிறந்து பிறந்து துன்புறுவர். துணிவுடன் நன்மை செய்பவனுக்கு யானையை வேட்டையாடுவோனும், துணி வற்றவனுக்குக் குறும்பூழ் வேட்டுவனும் உவமைகள்."

கசடு ஈண்டு காட்சி — அறியாமை; தொய்யா உலகம் — மேல் உலகம்; சுவர்க்கம்.

"மாறிப் பிறப்பின்" என்ற தொடர் பல பிறப்புக்கள் உண் டென்று உணர்த்திற்று; "மாறிப் பிறவார் ஆயினும்" என்ற தொடர் மறுபிறப்பு இல்லை என்று சொல்லுவோர் உண்டு, என்ற பொருளை உணர்த்திற்று.

மறு பிறப்பு இல்லை என்றாலும் இவ்வுலகில் புகழ் நிலைக்கும்படி நல்ல செயல்களைச் செய்துவைத்து இறத்தலே சிறந்தது என்ற கருத்தை இச் செய்யுளின் இறுதியில் உள்ள மூன்று அடிகள் வலியுறுத்தின.

இச்செய்யுள் மறு பிறப்பு உண்டு அல்லது இல்லை என்பதை வலியுறுத்தவில்லை. மறு பிறப்பு உண்டென்போரும் உளர்; இல்லை யென்போரும் உளர்; என்ற கருத்தை மட்டும் உரைத்தது.

இறந்த உயிர் மீண்டும் பிறப்பதில்லை என்போர் தமிழகத்தில் இருந்தனர் என்பதை இப்புறநானூற்றுப் பாடலால் காணலாம். இக்கருத்துப் பரிபாடலிலும் காணப்படுகின்றது.

"செறுதீ நெஞ்சத்துச் சினம் நீடினோரும்
சேரா அறத்துச் சீர் இலோரும்
அழிதவப் படிவத்து அயரி யோரும்
மறுபிறப்பு இல்எனும் மடவோரும் சேரார், நின்னிழல்"

என்பது ஐந்தாவது பரிபாட்டு; முருகனைப்பற்றிப் பாடியது. "உயிர்களைக் கொல்லுகின்ற தீய நெஞ்சத்தையுடைய கோபக்காரர் களும், அற நெறியை அணுகாத புகழ் அற்றவர்களும், தவ வேடங்

கொண்டு, ஒழுக்கங்கெட்ட சோம்பேறிகளும், மறுபிறப்பு இல்லை என்று வாதமிடும் அறிவற்றவர்களும் உன்னுடைய அடி நிழலைச் சேரமாட்டார்கள்".

மறு பிறப்பு உண்டு என்பதையே இப்பாடல் வலியுறுத்திற்று; மறு பிறப்பு இல்லையென்போரை மடையர் என்று வசை கூறிற்று. இதனால், மறு பிறப்பு இல்லை என்று கூறியவர்கள் தமிழகத்தில் இருந்தனர் என்பதை அறியலாம்.

மேலே கூறியவைகளைக்கொண்டு, பண்டைத் தமிழரிடம், சமயக் கொள்கைகள் இருந்தன; சமயத்திற்கு அடிப்படைக் கொள்கைகள் இருந்தன; என்ற உண்மையைக் காணலாம்.

தமிழர்கள், உயிர்வேறு, உடல் வேறு என்று நம்பினர்; உயிர் இருந்தால்தான் உடல் இயங்க முடியும்; உயிர் இன்றேல் உடல் தனித்து இயங்க முடியாது; என்ற உண்மையை உணர்ந்திருந் தனர்.

ஊழ்வினையிலே தமிழர்களுக்கு நம்பிக்கையிருந்தது. உயிரை ஆட்டிவைப்பது ஊழ்வினைதான் என்று நம்பினர்.

இறந்தபின் செல்லக்கூடிய உலகம் தனியாக உண்டு; நன்மை புரிந்தவர்கள், துறக்கத்தையடைந்து இன்பந் துய்ப்பார்கள். தீமை செய்தவர்கள் நரகத்தை அடைந்து துன்புறுவார்கள். இந்த நம் பிக்கை பண்டைத் தமிழர்களிடம் இருந்தது.

இறந்த உயிர்கள் மீண்டும் பிறப்பது உண்டு; ஒரு உயிர் இவ் வாறு பல பிறவி எடுக்கும் என்ற நம்பிக்கை தமிழரிடம் இருந்தது.

இறந்த உயிர் மீண்டும் பிறப்பதில்லை; மறு பிறப்பு என்பது இல்லை; என்ற நம்பிக்கையுள்ளவர்களும் பண்டைத் தமிழகத்தில் இருந்தனர்.

மீண்டும் பிறப்பு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இவ் வுலகில் பிறந்தோர் புகழுடன் வாழவேண்டும்; புகழுக்குரிய நல்ல செயல்களைச் செய்துவிட்டு இறக்கவேண்டும்; பலனை எதிர்பாராமல் நன்மை செய்வதைக் கடமையாகக்கொள்ளவேண்டும்; இவ்வாறு பண்டைத் தமிழர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இக் கொள்கைகள் அனைத்தும், சமயங்களுக்கு அடிப்படை யானவை; பெரும்பாலான சமய வாதிகள் இக்கொள்கைகளை ஏற் றுக்கொள்ளுகின்றனர்.

சங்க காலத்துத் தமிழர்களிடையே — அதற்கு முன்னிருந்த தமிழர்களிடையே—மேலே காட்டிய கொள்கைகள் குடிகொண்டிருந் தன. ஆயினும் அவர்கள் பின்பற்றிய சமயம் யாது? என்பதை அறியமுடியவில்லை. சமயம் என ஒன்று இருந்ததாகக்கூடச் சொல்லமுடியவில்லை.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# குறுந்தொகையிற் பாலை பாடிய பெருங்கடுங்கோ.

## திறனாய்வு.

சாமி. செல்வவிநாயகன்.

அடுத்த பாடல் மிக அழகிய பாடல். தலைமகன் சொல்லியது. "மென்மையையுடைய பெண்ணே! நின் நன்னெஞ்சம் தனித்து வருந்த நின்னை நீங்கிச் சென்ற இடத்தே மனம் பொருந்தி இருப்பேனாயின் யான் செல்லவுற்ற தகவுறு செயலின்கண் என்னை நீங்கி இரப்போர் வாராத நாட்கள் பலவாகுக" என்று தலைவன் தலைவியைத் தேற்றுகின்றான். இம் மொழிகள் அவன் பண்பு நலனை உணர்த்தி நிற்பன. முதலில் அவன் தலைவியைப் பெரிதும்பாராட்டுகின்றான். இது அவனுடைய அன்புள்ளத்தைக் காட்டுகின்றது. தலைவி மென்மையும் நன்னெஞ்சமுங் கொண்டவள் என்பதும் தெரிய வருகிறது. அடுத்த அடியில், தனது செலவை உணர்த்தினான். அவன் "நான் நின்னை நீங்கி யாண்டும் செல்லேன்" என்று கூறினானல்லன். "நின்னை நீங்கி வெகுநாள் அமையேன்" என்றே கூறினான். இது அவனுடைய கடமையுணர்ந்த நிலையைக்காட்டுகின்றது. சென்ற இடத்திலும் அறஞ்செயும் பெற்றியன் தலைவன். "நிற்றுறந்து அமைகுவெனாயின் இரவலர் வாரா வைகல் பலவாகுக யான் செலவுறு தகவே" என்பது அவனுடைய மொழிகள். சென்ற இடத்திலும் அறஞ்செயும் தலைவன் இல்லத்தில் எப்படி யிருப்பான்! பேரறம் அன்றோ இயற்றுவன்! இதனால் தலைவனின் மிகச்சிறந்த கொடைப்பண்பு கூறப்பட்டது.

சிலர் புகழுக்கு எனப்பிறர்க்குப் பொருள் அளிப்பர். இவர்கள் அறவிலை வணிகர்கள். தம் புகழ் வளர்க்க உலகில் இரவலர் இருக்க வேண்டும் என்று எண்ணுவோரும் உண்டு. இவர்கள் புல்லியர். நந்தலைவன் அவ்வாறல்லன். இரவலரை ஒழித்தல் இவ்வுலகில் எளிதில் ஏலாது. எனவே அவர்க்கு உதவி செய்தலே கடமையாகும். தலைவன் தன்னை யிரந்து பொருள்பெற இரவலர் வேண்டும் என்று விரும்பினானல்லன். இரவலருடைய குறையகற்றக் கசிந்துருகி

---

222 ஆம் பக்கத் தொடர்ச்சி.

புத்த—சமண மதங்களுக்குப் பிறகுதான் பல சமயங்கள் உருவெடுத்தன; தமிழ் நாட்டில், தமிழரிடம் நிலைத்திருந்த தெய்வங்களின் பெயரால் பல சமயங்கள்—சமயக் கலைகளுடன் தோன்றின என்று எண்ண இடம் உண்டு. இவ்வாறு தோன்றிய சமயங்களில் பண்டைத் தமிழர்கள் பின்பற்றி வந்த அறங்களும், அடிப்படைகளாக அமைந்தன. இதுதான் உண்மை.

ஆகவே பண்டைத் தமிழர் சமயம் எதுவென்றால், அது இன்னது என்று தெரியாது; அதற்கு ஒரு பெயரைக் குறிப்பிடமுடியாது; என்றுதான் சொல்ல முடியும்.

முன்னின்றான், அவ்வளவே. அவனுடைய செயல் தூயது. வினைச் செயலை "தகவு" என்று கூறியமை மிகச்சிறந்தது. பெரும் புலவரின் பொற்பாடலைக் காண்போம்.

"மெல்லியல் அரிவைநின் நல்லகம் புலம்ப
நிற்றுறந்து அமைகுவென் ஆயின் எற்றுறந்து
இரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே". (குறுந்தொகை கூ௭)

ஆறும் பாடலைக்காண்போம். இப்பாடல் பொருள் முற்றி மறுத்தரும் தலைமகன் தோழிக்கு உரைப்பானாய்க் கிழத்தியைத் தெருட்டியது. இப்பாடல் தலைவனின் அன்பு நெஞ்சத்தை நம்முன் வைக்கின்றது. கொடுவெம்பாலையிலும் தலைவியை நினைந்து நினைந்து உருகிய தலைவனின் உரை இது. இந்த அன்புக் கவிதையைக் கவிஞர் மிக அழகாக எழுதியுள்ளார். யாண்டும் தலைவியையே நினைத்த தாகக் கூறித் தன் அன்பகத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றான் தலைவன். இத்தகைய அன்பு வெள்ளத்தில் புரண்டு புரண்டு திளைக்கச் செய்கின்றார் புலவர். பாலை நிலத்தியல்பு இதில் மிக அழகாகக் கூறப்படுகின்றது. வழிப்போக்கரின் உயிரை உடலில் இருத்தும் நெல்லிக்காய்கள் மறப்புலிக் குட்டியின் தொகுதியில் உதிர்ந்து கிடக்கும் கடத்தற்கரிய காடு அது. பாலை நிலத்தில் வழிப்போக்கருக்காக நெல்லித் தருக்களை வைத்து வளர்க்கும் தமிழறம் இதில் கூறப்படுகிறது. "இறப்பருங் குன்றம் இறந்த யாம்" என்ற தலைவன் மொழியில் ஒரு செம்மாப்பு காணப்படுகின்றது. அடுத்து அவனுடைய ஆர்வமொழிகள் வெளிவருகின்றன. அவன் தலைவியின் கூந்தலை "காட்டிற் செழித்த முடச்சினை வெட்சியின் தளை ஞெகிழ்ந்த பலபேரரும்புகள் மணக்கும் மையொத்த கரியது" என்று பாராட்டுகின்றான். "பல்போது" என்று குறித்தமை நயக்கத் தக்க ஒன்று. இது தலைவியின் அழகை உரைத்தபடி. அன்பை "நட்பு" ஆகக் குறித்தமை உணரற்குரியது. காதலையும் நட்பையும் ஒன்றாகக் கருதல் தமிழர்க்கே உரிய ஒரு தனிப் பண்பாடு.

பாட்டைக் காண்க:

அறந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோளிடங் கறங்கும்
இறப்பருங் குன்றம் இறந்த யாமே
குறுநடை பலவுள் ளலமே நெறிமுதற்
கடற்றிற் கலித்த முடச்சினை வெட்சித்
தளையவிழ் பல்போது கமழும்
மையிருங் கூந்தல் மடந்தை நட்பே. (குறுந்தொகை உ0௯)

அன்பு வெள்ளத்தில் விழுந்து கரைந்து மாசு நீங்கி ஒளிமயமான தலைவனின் நெஞ்சத் துடிப்பொலி இது. *

---

* அடுத்த பாடல் (குறுந். உ௧௧) இவ்வாசிரியரே மருதம்பற்றிப் பாடியதாக அமைந்துள்ளது.

அடுத்த பாடல், உடன்போக்கு நேர்ந்த தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது. தோழி சொல்கின்றாள், "ஊர் பழிக்க சேரியில் உள்ளார் கல்லென்று ஆரவாரிக்க அமையாது நம்மை அலைக்கும் அறனில் அன்னை பிரிந்து தனித்திருப்பாளாக! நான், நெடிய தொலைவின் கண்ணுள்ள நாட்டின்கண் வானத்தைத் தொட வுயர்ந்த குறுக்கிட்ட மலையின் அடிவாரத்தில் உள்ள (விலங்குகள் நிறைந்த மலையடிவாரத்தில் என்றலும் ஆம்) கரும்பு நட்ட பாத்தி போன்ற பெருங்களிற்றின் அடிச்சுவட்டின்கண் நிலைத்த நீரைத் தலைவரோடு நெல்லிப்பழம் தின்ற முள்ளைப் போலக் கூரிய பற்கள் விளங்க நீ உண்ணுதலை நினைந்தேன்" என்று

ஊஉர் அலரெழச் சேரி கல்லென
ஆனா தலைக்கும் அறனில் அன்னை
தானே இருக்க தன்மனை யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க
உணல்ஆய்ந் திசினால் அவரொடு சேய்நாட்டு
விண்தொட நிவந்த விலங்குமலைக் கவாஅன்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே.

(குறுந்தொகை உகூஉ)

தலைவி தன் தலைமகனுடன் செல்லுங்கால் நிகழப்போவதை முன்னரே எண்ணிப் பார்க்கின்றது தோழியின் அன்புள்ளம். கூரிய பற்களைக் கூறினமையால் தலைவியின் அழகு பெறப்பட்டது. "அறனில் அன்னை" என்று குறித்தது நகைச்சுவை ததும்புவது. "ஆனாதலைக்கும் அறனில் அன்னை தானே இருக்க" என்னும்போது பழிவாங்கத் துடிக்கும் உள்ளத்தின் சாயல் தெரிவது காண்க. பெருங்களிற்று அடிவழிக்குக் கரும்பு நடு பாத்தியை ஒப்பிட்டது மிகஅழகாக உள்ளது. பெருங்களிற்று அடி நிலையில் தேங்கிய நீராயினும் அது தலைவனுடன் உண்ணுங்கால் அமிழ்தம் போல்வது. இது தலைவன் தலைவி இருவருக்குமிடையே நிலவும் அன்புரிமையைக் காட்டும் பாடல். தன் தோழி தக்க துணைவனுடன் செல்ல இருப்பதை உன்னி உன்னி மகிழும் தோழியின் தூய உள்ளம் இப்பாடலினால் தெரிகின்றது. தக்க துணைவனை அறிந்து மணம் முடித்தலை நம் முன்னோர் "அறன்" எனக் கருதியமைக்கு இப்பாடலும் ஒரு நல்ல சான்றாகும்.

அடுத்தது, தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழி ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு "அவர் பிரிய ஆற்றேனாயினேனல்லன்; அவர் போயின கானத்துத் தன்மை நினைந்து வேறுபட்டேன் என்று கிழத்தி சொல்லியது. தலைவியின் தெளிந்த அன்புள்ளம் இப்பாடலிற் பொலிந்துள்ளது. "உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர் இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு" என்னும் மணிமொழிகளைத் தலைவன் கூறியதாகத் தலைவி சொல்கின்றாள். தலைவனின் குண நலம் நன்கு தெரிகின்றது. தெள்ளத் தெளிய உரைக்கும் தலைவன் அவன். "சொல்லிய வன்மை தெளியக்காட்டிச்சென்றனர்" என்று தலைவியின்

உரைகள் கிடக்கின்றன. இத்தகைய தலைவனையும் இவனைப் படைத்த தலைவரையும் போற்றி வழிபடுதல் நம் கடனாகும். இப் பொன்மொழிகளை உதிர்த்த "வன்மையை" நாம் என்றும் மறவோம். தலைவி தலைவனைப் பாராட்டுகின்றாள். வாழ்க என வாழ்த்துகின்றாள். "கூற்றத்தன்ன கொலைவேல் மறவர் வழியே தங்கி வழிப்போக்கரைக் கொன்றெறிந்த புலாலைப் பருந்து பார்த்திருக்கும் நெடிய பழைய இடத்தனவாய நீரில்லாத வழியை நினைத்து நடுங்குகின்றாள். இவையெல்லாம் கற்புடைப் பெண்டிரின் செயலன்றோ? இக் கற்புத்தாய் கடமையுணர்ந்தவள். இவளும் இவள் கொழுநனும் பாலைபாடிய பெருங்கடுங்கோவின் கையிற்பட்டு அழகிய வடிவம் பெற்றுவிடுகின்றனர். என்னே இப்புலவரின் திறம்!

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவுஎனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி என்றும்
கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்
ஆற்றிருந் தல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடை பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ திடைய நீரில் ஆறே".

(குறுந்தொகை உஅ௩)

மேற்பாடலில் பாலைநில வருணனை மிக அழகியது. இப்புலவருக்கு "பாலை பாடிய" என்றடையிட்டுச் சிறப்பித்த நம் முன்னோரின் அறிவுத் திறனைப் பெரிதும் போற்றல் வேண்டும்.

இறுதிப் பாடல், பிரிவுணர்த்திய தோழி தலைமகன் பிரிந்து வினைமுடித்து வருந்துணையும் ஆற்றியுளராவென்று உலகின்மேல் வைத்து உரைத்தாட்குத் தலைமகள் ஆற்றுமைமீதூரச் சொல்லியது. தலைவி, "நம்மை அறிவுறுத்துவாரையே காண்கின்றோம். குளிர்ச்சியுண்டாகத்தூவும் மழைத்துளியையுடைய துயரம்மிக்க நேரத்தில் கயலொத்த மையுண்ட கண்களையும் கனவிய குழையையுமுடைய மகளிர் கையே கருவியாக நெய் பெய்து ஏற்றிய சுடர் விளக்குகள் துயரத்தை எழுப்புகின்ற மாலைக்காலத்தில் பெறுதற்கரிய தலைவர் வந்தாராக, விருந்து செய்து உடல் பூரிக்கும் மகிழ்ச்சியோடு முன்னெழுந்த கண்கலங்கி விழும் நீர்த்துளியைத் துடைப்போரைக் காணோம்" என்று சொல்கின்றாள்.

தலைவனின் பிரிவு அன்பான தோழியையே குறைப்பட்டுக் கொள்ளச் செய்கின்றது. தலைவனின் பிரிவு அவ்வளவு வாட்டுகின்றது தலைவியை. தலைவியின் நெஞ்சத்தை, பெண் நெஞ்சத்தை எப்படித்தான் உணர்ந்தாரோ புலவர். மகளிர் விளக்கேற்றும் மாலைக்காலம் மிக அழகாகக் கூறப்படுகின்றது. நெஞ்சத்திற் கவிதை விளக்கை ஏற்றுகின்றார் புலவர். தலைவன் வந்த உவகையால் விருந்தயர்தல் அன்றைய வழக்கம்போலும்! பிரிவின்கண் கீழே விழும் துன்பக் கண்ணீரைத் துடைப்பதைவிடத் தலைவர் வந்தவுடன்

துளிக்கும் இன்பக் கண்ணீரைத் துடைப்பது மேலாயது என்று தலைவி கருதுகின்றாள். தலைவன் வந்தால் மெய்ம்மலி உவகை அடைவாளாம் தலைவி! "உவகை அறிவோடு கூடியது" என்னும் சொக்கப்ப நாவலரின் தஞ்சை வாணன்கோவை யுரையை இணைத்துக் காண்க. தலைவனை "அரும் பெறற் காதலர்" என்று குறித்தமை தலைவனின் தூய அன்புள்ளத்தையே உணர்த்திற்று. இப்பாடலில் தலைவியின் துயரவொலி கேட்கின்றது.

"தேற்றா மன்றே தோழி தண்ணெனத்
தூற்றுந் துவலை துயர்கூர் காலைக்
கயலே ருண்கட் கனங்குழை மகளிர்
கைபுனை யாக நெய்பெய்து மாட்டிய
சுடர்துயர் எடுப்பும் புன்கண் மாலை
அரும்பெறற் காதலர் வந்தென விருந்தயர்பு
மெய்ம்மலி யுவகையின் எழுதரும்
கண்கலிழ் உகுபனி யரக்கு வோரே".

(குறுந்தொகை நகூஅ)

மேலே பாலைப்புலவரின் குறுந்தொகைப் பாடல்களைக் கண்டோம். அவை ஒன்பதும் பாலைக்குரியன. இப்பாடல்கள் அனைவற்றிலும் ஒரு ஆழ்ந்த ஒற்றுமை நிலத்தினுட் கிடக்கும் நீர்போல ஊடுருவிக் கிடக்கின்றது. ஒவ்வொன்றிலும் அவருடைய புலமை வீறி வெளிவருகின்றது. அறநெறியிற் சேர்க்க உதவும் பொன்மொழிகளும் பாலைநில வருணனையும் இப்புலவரால் நன்கு கூறப்படுகின்றது. உள்ளத்தின் வாய்மையும் வாக்கின் தூய்மையும் கவியழகை மிகைப்படுத்துகின்றன. உவமைகள் கவி நயத்திற்கு மெருகூட்டுகின்றன. சுவைக்குக் கேட்கவா வேண்டும்?

புலமைப் புரவலர் கண்ட தலைமகன் தலைமகள் பெருமக்களாவர். உயர்ந்த பண்பாட்டின் எடுத்துக்காட்டுகள் அவர்கள். ஆழ்ந்த அறிவும், பெரு வலிவும், வண்மையும், உண்மையும் வினைத்திட்பமும் காதன்மையும் கொண்டு தலைவன் இலங்குகின்றான். தலைவி பெண்மையும், அறிவுத்தெளிவும், கற்புத்திண்மையும் வாக்கு வன்மையும் கொண்டு காட்சியளிக்கின்றாள். தோழியோ கூர்த்த அறிவினள். அறந்தெரிந்த திறத்தினள். இவர்கள் புலவர் படைத்த உலகத்திலே பெருவாழ்வு வாழ்ந்து மணம் பரப்புகின்றார்கள்.

மனித வாழ்வை இடித்துத் திருத்தி நன்னெறிக்கண் சேர்ப்பதே இலக்கியத்தின் முழுமுதற் கடமையாகும். பாலை பாடிய பெருங்கடுங்கோவனாரின் பாக்கள் இப்பணியில் பெரிதும் உழைக்கின்றன. குறுந்தொகை யென்னும் மணிப் பேழையில் இப்புலவரின் பருமுத்துக்கள் தனியழகோடு மிளிர்கின்றன. சொற்கள் உணர்ச்சி நிறம் பெற்று ஓவியந் தீட்டுகின்றன. அழகிய அழியா ஓவியக்காட்சி நம் கண்முன் நிலைக்கின்றது. அம்மம்ம! இப்புலவர் திறத்தைக் கட்டுரைத்தல் நம்மால் ஏலாது.

முத்தமிழ்க் காவலர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதமவர்களின்

# மணி விழா.

11-11-58.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதமவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா பழம் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் சான்ற திருச்சிராப்பள்ளியில் அமைந்த தேவர் மன்றத்தில் ஐப்பசி உசூ-ல் சிறப்புற நிகழ்ந்தது.

திரு. விசுவநாதமவர்களும், அவர்களுடைய இல்லக் கிழத்தியாரும் ஊர்வலமாகத் தேவர் மன்றிற்கு அழைத்துவரப்பெற்றனர். தமிழ்த் தொண்டரின் மணி விழாவைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு தேவர் மன்றிற் கூடி அணிசெய்திருந்தனர். குளிக்கரை பிச்சையப்பா அவர்களின் குழுவினரும், ஏ. கே. சி. நடராசன் குழுவினரும், கருவிவழிப் பொழிந்த இன்னிசையால் மக்கள் இன்ப வெள்ளத்தில் திளைத்தனர். சென்னை மண்டிலத்தின் முன்னுள் முதலமைச்சர், திரு. ஓமாந்தூர், P. இராமசாமி ரெட்டியாரவர்கள் தலைமையேற்றுத் திரு. விசுவநாதமவர்கள் தமிழிற்கும், தமிழர் நலத்திற்கும் ஆக்கஞ் சேர்க்கும் நெறியில் உழைத்த உழைப்பினையும், தன்னளவில் நடு நின்று வாணிக நெறியில் வளர்பொருளீட்டிய தாளாண்மையையும், ஊருணி நீர் நிறைந்தாற்போல உற்ருரும் உறவினரும் மற்ருருமாய பலரும் பயன் துய்ப்ப வாழும் வேளாண் வாழ்வையும் வியந்து பாராட்டிச் சிறப்பித்தனர். தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள அரசியல் அறிஞர்கள், பொது நலத் தொண்டர்கள், மொழித்துறைபோகிய மூதறிவாளர், தமிழ்த் துறை தேர்ந்த தண்டமிழறிஞராதிய மக்களின் வாழ்த்துக்கள் படிக்கப்பெற்றன. பல்வேறு சங்கங்கள் முத்தமிழ்க் காவலரின் மணி விழாவைப் பாராட்டி வாழ்த்துப்பாக்கள் வழங்கிச் சிறப்பித்தன. சங்கமமைத்துப் பைந்தமிழ் புரந்த பாண்டிய மன்னர்கட்குப் பிறகு பைந்தமிழின் பழமை, தனிமை ஆகிய சிறப்புக்களைப் போற்றுதற் கெழுந்த நம் கரந்தைத் தமிழ்ச் சங்க வாயிலாகப் பாராட்டிதழ் படித்தளிக்கப்பெற்றது. "செந்தமிழே! உயிரே! நறுந்தேனே! செயலினை மூச்சினை உனக்களித்தேனே" என்ருற்போலத் தமிழையே தனது உயிர்ப்பாகவும், தமிழ்ப்பேணுதலையே தனது தொண்டாகவும் கொண்டு சங்கம் நிறுவிப்புரந்த தமிழவேள், உமாமகேசுவரம் பிள்ளையவர்களை முன்னிறுத்தித் தமிழ்ப்பேணும் தொண்டர்களில் மணிவிழாக் கொள்ளும் பெருமகனுன விசுவநாதமவர்கள் தலையாயவராவர். எண்ணிய எண்ணங்களைக் கேட்டார்ப்பிணிக்கும்வகையில் விளங்கவுரைக்கும் நாநலஞ்சான்ற நல்லறிஞர். எடுத்த காரியத்தைத் திறம்படச் செய்துமுடிக்கும் செயற்றிறம் வாய்ந்த திறமையாளர். இத்தகைய திறம்பல வாய்ந்த செந்தமிழ்ப் பெருமகனுரை நம் சங்கம்,

# தொல்காப்பியம்

## சேனுவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு]

### 5 "னஃகா னுெற்றே.........வறிசொல்"

"ஆடூஉவறிசொல்...........என்றார்" என்பது ஒற்றுக்கள் மொழிக் குறுப்பாகுமன்றி உயிர்கள் போலத் தனித்து மொழியாத லெவ்வாற்ருனு மில்லை. அங்ஙனமிருப்ப "னஃகா னுெற்றே யாடூஉவறிசொல்" என்றல் எங்ஙனம் பொருந்தும்? னஃகா னுெற் றீற்றது ஆடூஉவறிசொல் லென்றுரைத்தா லன்ருே பொருந் தும் என்னும் வினுவிற்கு விடையாகின்றது.

வந்தனன் வந்தான் என்ருல் ஒவ்வொன்றிலும் எல்லா எழுத் துக்களுங்கூடியே சொல்லாகி ஆடூஉவை யுணர்த்துகின்றனவெனி னும் அவற்றுள் ஆடூஉவை யுணர்த்துவதற்கு னகர வொற்றே சிறப்புடையதாகக் காணப்படுகின்றது. என்னை ஏனைய எழுத்துக் களும் இங்கு ஆடூஉவை யுணர்த்துவதற்கு உரியனவாக நிற்பினும் வந்தனள் வந்தது என்பன முதலிய இடங்களில் பெண்பால் முதலிய வற்றை யுணர்த்துவதற்கு முரியனவாக நிற்றலால் அவை பொது வாக நிற்பன எனப்படுமன்றி ஆடூஉவை யறிவித்தற்கண் னகார வொற்றுப் போலச் சிறப்பாக நிற்பனவில்லை யாதலின் ஆடூஉவை யறிவித்தற்கண் னகார வொற்றே சிறப்புடையது என்பதையெண்ணி னஃகானுெற்றே யாடூஉவறிசொல் என்ருர் என்பதாம்.

---

[228ஆம் பக்கத் தொடர்ச்சி]

"வாழ்வுகலே நாகரிகம் வழங்கியிந்த உலகுயர்த்த வண்டமிழ்தான்
தாழ்வுநிலே எய்தவொரு தமிழனதைப் பார்த்துயிருந்
தாங்கலாமோ!
பாழ்வயிறு நிறைவதற்குப் பண்பைவிலே கூறுவதா? பழிக்காளாகி
ஊழ்வலிமை பேசிஉளம் ஒடுங்கலினும் உயிர்விடுதல்
உயர்வாம் என்றே
கறையேரு வகையிலருங் கடமைபுரி மாவீர"

என அவரியற்றிய தொண்டின் உண்மையோர்ந்து பாராட்டியது.

விழாவென்ருல் உள்ளத்தின் விழைவைப் புலப்படுத்தும் ஒரு நெறியாகமட்டும் கொள்ளாது ஆக்க நெறியிலும் அதனைப் பயன் படுத்தும் வகையில் புலவர் குழு அமைத்து, அதற்கென அறிஞர் களேக் கடைச்சங்கம்போல நாற்பத்தொன்மரை முறையாகத் தேர்ந்து, அதன் செயற்றிறங்களே ஒழுங்குற வகுத்து, அதற்கென ஒரு நூரு யிரம் வெண்பொற்காசுகளேச் சேர்ப்பதென முடிவுசெய்து, தானே ஐயாயிரம் வெண்பொற் காசுகளே உதவி வழிவகுத்த முத்தமிழ்க் காவலர் திரு. விசுவநாதமவர்களேப் பாராட்டிப் பல்லாண்டு கூறு கின்ருேம்.

பொழிற்ருெண்டர்.

" அறமாவதழுக்காறின்மை யென்றூற் போல "

என்பது, **அறமாவது அழுக்கா றின்றியது,** எனற்பாலது அழுக்காறின்மையின் சிறப்பு நோக்கி 'அறமாவது அழுக்காறின்மை யென வருதல்போல '**ஆடூஉவறிசொல்லாவது னகார வீற்றுச் சொல்'** எனற்பாலது னகாரத்தின் சிறப்பு நோக்கி 'ஆடூஉவறி சொல் னஃகா னொற்றெ'னப்பட்டது. என விளக்கமுறத் தெரிவித்த தற்கு எடுத்துக் காட்டு வாக்கியமாகத் திகழ்கின்ற தென்க.

அறமாவதழுக்காறின்மை யென்ருல் அறமாவதழுக்கா றின்றியது, (அறமாவது அழுக்காற்றுடன் கூடுதலில்லாதது) எனக் கொள்ளல்போல, ஆடூஉவறிசொல்லாவது னஃகா னொற்று என்ருல் ஆடூஉவறி சொல்லாவது னஃகானொற்றை யுடையது. (னஃகா னொற்றை யீற்றிலுடையது) எனக்கொள்ளல் வேண்டும் என்பதாம்.

அறம் என்றது அறச்செயலை யென்க. அறமாவது அழுக்கா றின்றியதெனவே அதனுடன் சேர்ந்த அவா முதலியவற்றினின்மை யும் சேர்த்து அறமாவது ' அழுக்காறவா வெகுளியின்னுச் சொல்' இன்றியது எனக் கொள்ளல் பொருத்தமாதல் போல ஆடூஉவறி சொல்லாவது னஃகா னொற்றெனவே னகரத்துடன் கூடிய அகர ஆகாரங்களையுஞ் சேர்த்து ஆடூஉவறிசொல்லாவது அன் ஆன் என்பனவற்றை யீற்றிலுடைய சொல் எனக் கொள்ளல்வேண்டும் என்பது கருத்து.

இக்கருத்துப் பின்னர் **"ரஃகா னொற்றும்"** என்னு நூற்பா வுரையில் "மூன்று காலமும் வினைக்குறிப்பும் பற்றிவரும் ஒப்புமை பற்றி அர் ஆர் என்னுமிரண்டீற்றையும் அடக்கி யோதினுர் இவ்வாறே அன் ஆன் அள் ஆள் என்பனவற்றையும் இவ்வொப்புமைபற்றி னஃகா னொற்று, ளஃகா னொற்றென அடக்கியோதினுர்" என எழுதுதலாற் புலப்படுகின்றது. சேனுவரையர். **"அன் ஆன், அள் ஆள் எண்னு நான்கும் ஒருவர் மருங்கிற்படர்க்கைச் சொல்லே"** (தொல்-சொல்-வினையியல்) என்பது முதலியன கொண்டு, இங்கு அடக்கியோதினு ரெனக் கருதினரென்க.

அழுக்காறின்மை அவா முதலியவற்றி னின்மைகளையு மடக்கு மென்பது, **"அழுக்கா றவா வெகுளி யின்னுச் சொல் நான்கு மிழுக்கா வியன்ற தறம்"** (திருவள்ளுவர்) என்பதனுற் பெறப்படு மென்க.

"அழுக்காறின்மை" எதனுற் சிறந்ததெனில் "அவா, வெகுளி, இன்னுச்சொல்" என்னுமிவை ஒரோவழி நன்மைபயத்தலு முண்டு, அழுக்காறென்றும் தீமையே பயக்குமாதலால் அவா முதலிய வற்றினும் அழுக்காறு கொடியதாகலான் அழுக்காறின்மை அவா முதலியவற்றின்மையினுஞ் சிறந்ததென்க.

"னஃகானொற்றூஉவறிசொல்... கருத்தாகக் கொள்க"

என்பது முன்னறிவிக்கப்பட்ட தொன்றனை விளக்கப்புகின், அறிவிக்கப்பட்டதனை முன்னர்க் கூறி, விளக்கப்புகுந்த செய்தியைப் பின்னர்க் கூறின் கேட்போர்க்கு நன்கு விளக்கமாகும். அவ்வாறு கூறுதலே மரபுமாகும். சாத்தன் கொற்றனிருவருளர் எனக்கூறிப் பின்னர் சாத்தனைப் பற்றி ஒன்று சொல்லத்தொடங்கின் "சாத்தன் என்பவன் நல்லறிஞன்" என்பது போலக் கூறின் கேட்போனுக்கு நன்கு விளக்கமாகும். அங்ஙனமின்றி நல்லறிஞன் சாத்தன் என மாற்றிக் கூறினால் எளிதில் விளக்கமாகாது. அது போல ஆசிரியர் "ஆடூஉவறிசொல்" என்னு நூற்பாவிலறிவிக்கப் பட்டவற்றுள் ஆடூஉவறிசொல்லாவது இன்னதெனவே விளக்குதல் வேண்டும்; அங்ஙனமின்றி "னஃகானொற்றேயாடூஉவறிசொல்" என மாற்றிக் கூறினார். அது எளிதில் விளக்கமாதற் கேதுவாகா திருப்பினும் ஆசிரியர் கருத்தை யுணர்ந்து ஆடூஉ வறிசொல்லாவது னஃகானொற்றை யீற்றிலுடையது என மாற்றிக் கூட்டிப் பொருள் கோடல் வேண்டும் என்கின்றது.

இன்னோசை குறித்து மாற்றினர் மாற்றினாரெனினும் அவர் கருத்துணர்ந்து பொருள் கோடல் சிறந்ததென்பதாம்.

"ஏகாரம்—அசைநிலை"

என்பது 'ஒற்றே' என்பதிலுள்ள ஏகாரம் இன்னோசைக்காக 'று' என்னும் அசையை நிலைக்களமாகக் கொண்டு நின்றதன்றி வேறு பொருளை நிலைக்களமாகக் கொண்டு அதனையுணர்த்த நின்றதில்லையென்கின்றது.

"உரையாசிரியர்........போலியுரை யென்க"

என்பது, இந்நூற்பா, னகார ஒற்றை யீற்றிலுடையதுதான் "ஆடூஉ வறிசொல்", மற்றையன இல்லை எனக் குறிக்க வந்த தாயின் ஏகாரம் பிரிநிலைப் பொருளின்கண் வந்ததென்னலாம். ஆடூஉ வறிசொல்லாவது இன்னதென விளக்கவந்ததாகலின் அசை நிலையே யாகும். ஆதலால் உரையாசிரியருரை போலியுரை யென் கின்றது. ஆடூஉ வறிசொல்லாவது இன்னதெனக் கூறின அள வாலேயே அது மற்றைய சொற்களினின்றும் பிரிக்கப்படுமாயினும், ஆண்டுப் பிரிக்கப் படுந்தன்மை இலக்கணத்தாலே தோன்றுமன்றி ஏகாரத்தாலில்லை யென்க. இங்கு ஆடூஉ வறிசொல் இன்னதென விளக்குதலிலேயே நோக்கமிருத்தலால் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்த தென்றல் பொருந்தாது என்பதாம். னகார வொற்றுடைமையே ஆடூஉ வறிசொற் கிலக்கணமாகும்.

இனி நச்சினார்க்கினியர் "னஃகானொற்றே" என்பதிலுள்ள ஏகாரம் 'தேற்றேகாரம்' என எழுதுகின்றனர். னகாரம் ஆடூஉ வறிசொல்லை யுணர்த்தாதென்பது, துணியப்பட்டதாகவோ ஐயப்

பட்டதாகவோ தோன்றின், அஃது ஆடூஉவை உணர்த்தும். உணர்த்தாதென்பதில்லை என்பதைப் புலப்படுத்த ஏகாரம் தேற்றத்தில்வந்ததென்னலாம். அங்ஙனமில்லை யாதலின் தேற்றத்தில் வந்ததெனல்பொருந்தாது.

7 "ரஃகானொற்றும்.........பலரறிசொல்லே"

"மார் எதிர்காலம்........வேறெனவேபடும்"

என்பது மார், ஆர் என்பதன்கணடங்குமே வேறு கூறியது எதற்கு என வினவி, மார் என்பதை ஆர் என்பதாகக்கொள்ளின் மார் எதிர்காலத்தில் வருதலால் மகரவொற்று பகர வகர ஒற்றுக்கள் போல எதிர்காலங்காட்டும் இடைநிலையாதல் வேண்டும். இடைநிலையாயின் பகர வகரங்கள்போல முதனிலைக்கேற்ப மாறுபட்டு, அதாவது செல் என்பதன்கண் செல்வானென வகரவொற்று இடைநிலையாகவரும் பகரவொற்றுவராது. அப்படியே உரை என்பதன்கண் உரைப்பான் என பகரவொற்று இடைநிலையாக வரும் வகரவொற்று வராது. அப்படி மகரவொற்று முதனிலைக்கேற்ப மாறுபடாமல் எல்லா முதனிலைக்கண்ணும் வருதலால் மார் என்பதை ஒரே இறுதிநிலைச் சொல்லாகக் கொண்டனர். அன்றி வினை கொண்டு முடிதலாகிய வேறுபாடு இருத்தலாலும் ஆரீறன்று இது வேறு எனப்படும் எனவுங் கொண்டனராதலின் மார் என்பது ஆர் என்பதன்கணடங்கா தென்கின்றது. "பொருள் வேறுபாடு" என்பது எச்சமாகி எச்சப்பொருடராமல், முற்றாகவே நின்று முற்றுப் பொருடரல் என்க. மார் என்பது எல்லா முதனிலைக்கண்ணும் வருதலாலும் வினைகொண்டு முடியும் வேறுபாடுடைமையாலும் ஆரீறன்று வேறீருகும் என்பதாம். பார் வார் என்பன எல்லா முதனிலைக் கண்ணும் தனித்தனி வாராமையின் அவை ஆரீறேயொழிய பார் வார் என வேறு ஈருகா. அங்குப் பகர வகரங்கள் காலங்காட்டும் இடைநிலைகளாகுமென்க. மார் என்பதும் காலங்காட்டுகின்றதெனில் அங்கு மகரம் காட்டப்படவில்லை 'மார்' என்பதே காட்டுகின்றதாதலின் அது பாலோடு காலமுங் காட்டுமிறுதிநிலையாமென்பதுகருத்து. உண்ணும், ஓடி, உண்ணிய, வாழ்க என்பன முதலியவற்றில் இறுதிநிலைகள் காலங்காட்டுதலை யறிக.

"உண்கும்........என்றார்"

என்பது தன்மைச் சொற்களை யுயர்திணைக்கேயுரிய சொற்களாகக் கொள்ளுமாறு

"அவ்வழி, அவனிவனுவனென" (தொல்-சொல்-பெ.) என்பதன்கண் "யான் யாம் நாமென வரூஉம் பெயரும்...உயர்திணைப் பெயரே" எனவும் "அவைதாம் அம்மா மெம்மேமென்னுங்கிளவியும்" (தொல்-சொல்-வினை) எனவுங் கூறுதலால் 'அம்மாம்' என்பன முதலிய தன்மைப் பன்மை யீறுகளையும் இங்

கெடுத்துரைத்தலின் றியமையாத தொன்றாயினும் அவையுட் சில உயர் திணையையும் அஃறிணையையும் எண்ணும்பொழுது "யானுமென் னெஃகமுஞ் சாறும்" என அஃறிணையையு முளப்படுத்துதலால் அஃறிணையினைச் சிறிது முளப்படுத்தாத ரஃகானொற்று முதலியன போலச் சிறந்தனவல்லவாதலின் அவ்வம்மாமென்பனவற்றை நேரத் தோன்றாவெனக் குறிக்க ரஃகானொற்று முதலியவற்றை நேரத் தோன்றும் என்றாரென்கின்றது.

கும்டும் தும்றும் என்பன எண்ணுங்கால் அஃறிணையை யுளப் படுத்துதலால் அவற்றோடு தன்மைப் பன்மை ஈறுகளாகச் சேர்ந்த அம்மாம் முதலியனவும் அஃறிணையை யுளப்படுத்தினும் உளப் படுத்துமென்பது தோன்ற அவற்றையு மிங்கெடுத்தாளாது விடுத் தனர் என்பார், "தம்டும் தும்றும் என்னுந் தொடக்கத்தனவும்" என்றார். தன்மை யொருமை யிறுதிநிலைகளாகிய குடுதுறு என்பன வற்றுள் 'டுதுறு' என்பன அஃறிணைப் படர்க்கையொன்றன்பாற் குரியனவாகவும் திரிதலால் அவற்றைத் திரியாமல் வினைக்கண் உயர் திணை யாண்பால் பெண்பாலைக் குறிப்பனவாக வரும் னஃகானொற்று, ளஃகானொற்றுக்களைக் கூறுமிடத்துக் கூறாது விடுத்தனராசிரியர் என்க. திரிந்துவரும் 'டு து று' என்பவற்றோடு 'கு' என்பதும் சேர்ந்ததாகலினதனையுங் கூறாதுவிடுத்தனர் என்க. இனி 'குடுதுறு' என்னும் தன்மையொருமை வினையீறுகள், உயர்திணை ஆண்பால் பெண்பாலிரண்டனையும் குறிக்கும் பொது ஈறுகளாக இருத்தலின் சிறப்பு ஈறுகளைக் கூறுமிடத்துக் கூறாது விடுத்தனரெனலே நன்று.

இந்நூற்பாவின்கண், பகரவொற்று ஈறாக வருவதன்று பகர வுயிர்மெய்யே ஈறாக வருவதென்பார் 'பகர விறுதி' என்றனர். இறுதி நிலைகளெல்லாம் இடைச்சொல்லாதலின் மாறிறுதியென்னாது 'மாரைக்கிளவி' யென்றனர். னகர ளகர ரகரங்கள் அகர ஆகா ரங்களுடன் கூடியே யிறுதியாகுமன்றித் தனித்து ஈறாகாமையின் அவற்றையு மிறுதியென்னாது "ஒற்றென" வழங்கினர். பின்னர்ப் பலவின்பாலிறுதி நிலைகளில் அகர ஆகார இறுதிநிலைகள் முதனிலைக் கண்வரும் அகர ஆகாரங்கள்போல மொழியீற்றில் தனித்துவர லின்றித் தமக்கு மேலே நிற்குமெய்யினை யூர்ந்து அவற்றினிறுதி யினிற்றலாலும் வகரம் பலரறி சொல்லாகிய பகரம்போல உயிர்மெய் யாகவே வருதலாலும் "அ, ஆவவெனவரூஉமிறுதி" யென்றனர். ஒன்றன்பாலின் இறுதி நிலைகளாகிய 'துறுடு' என்பன பால்காட்ட லின்யிடைச் சொல்லாயினும் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத் தலான், முற்றுகரச் சொல்லாகாவென்பார் ஒன்றறி கிளவி குன்றிய லுகரத்திறுதியாகும் என்றனர்.

'ஒன்றறி கிளவி' யென்பது இறுதி இடைச்சொல்லையுணர்த்து வது 'மாரைக்கிளவி' என்பதுபோல வுணர்த்தவில்லை. 'வந்தது' என்பதுபோன்ற இறுதியையுடைய வினைச்சொல்லையே யுணர்த் திற்று என்க.

3

'ஒன்றறிகிளவி, குன்றியலுகரத்திறுதியாகும்' "ஈற்றி னின்சைக்கும் பதினேரெழுத்தும்" எனக் குறிப்பிடலால், னஃ கான் முதலியன பால் உணர்த்தும் சிறப்பால், அவற்றையே ஆடூ உவறிசொல் முதலியன எனக்கொள்ளுமாறு கூறினும் அவற்றை யீற்றிலுடைய சொற்களே ஆடூஉவறிசொல் முதலியன எனக் கொள்ளல் வேண்டும்.

னஃகானொற்று முதலியன இருபெயர் ஒட்டி நின்று பிறிது பொருளை யுணர்த்துதலால் இருபெயரொட்டாகு பெயரெனவும் தொகையை நோக்கும்பொழுது அன்மொழித்தொகை யெனவுங் கூறலாம். னகர முதலியவற்றையும் விடாமல் பிறிதுபொருளுணர்த் தலால், விடாத ஆகுபெயர் அல்லது விடாத அன்மொழித்தொகை யென்னலாம்.

'னஃகானொற்று' முதலியன இவ்வாறு வருதல் சாலுமென் பதனை, சேனவரையர் "பண்புதொக வருஉங்கிளவியானும்" (தொல்–சொல்–எச்) என்னு நூற்பாவுரையில் "வெள்ளாடை அகரவீறு என்பன பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை" என எழுதுதலாலறியலாம். இருபெய ரொட்டுப் பண்புத்தொகை நிலைக்களத்தன்மொழித்தொகை வரா தென்பது பொருந்தாது.

8 'ஒன்றறிகிளவி தறடவூர்ந்த குன்றியலுகரத்திறுதியாகும்'

"கிடைக்கை முறையாற் கூறாது.........................கூறினர்"

என்பது நெடுங்கணக்கில் டகரத்தின் மின் தகரமும் அதன் பின் சேய்மையில் றகரமும் கிடப்பனவாகக் காணப்படுகின்றன இங்கு அம்முறையாற் கூறாமல் மூன்று காலமும் வினைக் குறிப்பும் பற்றி வருதலும் வினைக்குறிப்பே பற்றிவருதலுமாகிய சிறப்பும் சிறப் பின்மையுங்கொண்டு 'டதற' என்னாமல் "தறட" என்று கூறின ரென்கின்றது.

அன் ஆன் என்பன குறிலும் நெடிலுமாகிய வேறுபாடு தவிர வேறு வேறுபாடின்மையால் 'னஃகானொற்று, என ஒன்றாக அடக்கிக் கூறினர். அவ்வாறே 'ளஃகானொற்று ரஃகானொற்று' என அடக்கிக் கூறினர். அவற்றைப்போல ஒன்றன்பாலிறுதியாக வருவன குற்றுகரங்களாக இருந்தாலும் அவை தாமேறிய தகர றகர டகரங்களால் மேற்கூறிய சிறப்பும் சிறப்பின்மையும் பெறுவன வாக இருத்தலின் வெவ்வேருயின. வெவ்வேருகவே "ஒன்றறி கிளவி குனறியலுகரத்திறுதியாகும்" எனச் சுருக்கிக் கூற இயன்றில என்பார் "குற்றியலுகரமெனவொன்ருகாது மூன் ருயின" என்றனர்.

குற்றியலுகரம் ஏறிய எழுத்துவகையாற் பலவாக இருத்தலின் அதனாலுமங்ஙனங் கூருதுவிடுத்தனரெனலுமாம்.

9 "அஆவவெனவருஉமிறுதி.........பலவறிசொல்லே"

"அவற்றுள் 'உண்ப' என்பது" எனத்தொடங்கி "இயல் பேயாம்" என்பதுவரை நிகழுந்தொடர்கள், அகர இறுதி எதிர் கால இடை நிலையுடன் வந்ததற்கெடுத்துக்காட்டாக 'உண்ப' என்பதை யெடுத்துக்காட்டுதல் பொருந்தாது 'அது' இயல்பான நிலைமைக் கண் பலரறி சொல்லாகுமன்றி பலவறி சொல்லாகாது செய்யுளாயின் செய்யுள் விகாரத்தால் இயல்பான 'அன்' என்பது தொக உண்பன எனவராமல் 'உண்ப' என வரலாம். வழக்கிலவ் வாறு விகாரச் சொல் வராதாகலான், வழக்கிற்கும் செய்யுளிற்கு முரியவாக இயல்பான சொல்லையே காட்டுதல்வேண்டும். இயல்பான சொற்களைப் பேசும்பொழுது விகாரச் சொற்களை எடுத்துக்காட்டுத லெங்ஙனம் பொருந்தும் "எண்ணென்ப வேனையெழுத்தென்ப இவ்விரண்டுங், கண்ணென்ப வாழுமுயிர்க்கு" (திருவள்ளுவர்) என்பதனுள் வரும் 'என்ப' என்பவற்றுள் முன்னைய இரண்டும் 'என்பன' என வரற்பாலன செய்யுளாகலான் விகாரப்பட்டு 'என்ப' என நின்றன. அவையங்குப் பலவின் பாலையுணர்த்து கின்றன. பின்னர் நின்ற 'என்ப' என்பது பலரறி சொல்லாக நிற்கின்றது. அது விகாரச் சொல்லன்று. அதுபோல 'உண்ப' என்பதும் விகாரச்சொல் அன்று. இயல்பான சொல்லாகலான் பலர்பாலையேயுணர்த்தும் என்பாரை நோக்கி, 'உண்ப' என்பது பகரவுயிர் மெய்யை யிறுதியாகவுடையதெனக் கருதின் அது பலர் பாலையுணர்த்துவதாகும். எதிர்காலங் காட்டும் பகரவொற்றுடன் கூடிவந்த அகர இறுதியை யுடையது எனக்கருதின் அது பலவின் பாலையுணர்த்தும். பலவின்பாலையுணர்த்தும் அகரஇறுதி, எதிர் காலம் காட்டும் பகரவொற்றுடன்மட்டுமன்றி வகரவொற்றுடன் கூடிவரினும் ஏனைய இறந்த காலம் நிகழ்காலங்களைக் காட்டும் ஒற்றுக்களுடன் கூடிவரினும் அன்சாரியைப் பெற்று வருதலும் பெறுமல் வருதலும் தனக்கு இயல்பாகக் கொண்டமையால் செய்யுள் விகாரத்தான் அன்பெறுமல் 'உண்ப' என்பது முதலிய இடங் களில் வந்ததெனல் பொருந்தாது. அன்பெறுமலும் வருமாதலின் அவ்வாறு வந்த உண்ப என்பது முதலியன இயல்பான சொற்களே யாகும். ஆனதால் 'உண்ப' என்பது முதலியவற்றை பகரவுயிர் மெய்யீறெனவும் அகரவீறெனவும் இடநோக்கி யுணரல் தகுதி யன்றி அகரவீறல்ல பகரவுயிர் மெய்யீறுடையன எனல் பொருந் தாது எனக் குறிப்பிடுகின்றனர். (தொடரும்)

கொரடாச்சேரி—சித்தாந்த நிலைய அதிபர்

## ஸ்ரீ வாலையானந்த சுவாமிகள் என்னும் ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்

சிவபரிபூரணம் அடைந்தமைக்கு

திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்த சைவமணி

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

# ஆற்றாது பாடியது.

1. கயிலாய பரம்பரையிற் சயிலாதி மரபினிலே
கவினத் தோன்றிப்
பயிலுமுயர் சிவஞான பானுவென அகத்திருளைப்
பாற்றி யாங்கள்
உயுநெறியைப் பல்லாற்று னும்விரித்துப் படவிளக்கம்
உஞற்றி மேலும்
செயுநெறியை யுரையாமற் சிவபரிபூர ணத்துற்றாய்
செய்வ தென்னே.

2. அருணந்தி தேசிகனல் லரவிந்தத் தாட்டுணையை
அடைந்து மேலாம்
பொருளான சித்தாந்த சைவமுல கினிற்பரப்பிப்
புரந்தாய் அந்தோ!
மருளாரும் பலசமயப் பிணக்கருரை மயக்கினிலே
மாழ்கு மாக்கள்
தெருளுறநீ விரிவுரையால் தெருட்டாமல் சிவபரிபூ
ரணத்துற் றாயே.

3. வாலையா னந்தரென வுலையுலக முழுவதுமே
வழிபட் டேத்தச்
சீலமுறு சித்தாந்த சைவநெறி யறிவுறுத்த
செல்வா! சென்றாய்
நீலமுறு மணிமிடற்று நின்மலனோ டிரண்டற்ற
நிலையை யுற்றாய்
மாலுறவெங் களைவிட்டாய் சச்சிதா னந்தனென
வயங்குந் தேவே.

4. சித்தாந்த நிலயமொன்று தாபித்தா யதைப்புரக்கும்
செலவுக் காகச்
சித்தர்பயில் மருத்துவத்தி லிணையின்றித் தெளிந்தளியால்
சிவனும் நோய்கள்
எத்தனைவன் மையவேனு மதன்குறும்பை அருட்டுணையால்
இனித கற்றிப்
பத்தர்கணம் துதிசெயநீ வீற்றிருந்தா யரைக்கணத்தில்
பரந்துற் றாயே.

5. கற்றோர்கள் பலரிருந்தென் கவினுறுசித் தாந்தநெறி
கல்லா ரந்தோ!
பற்றார்கள் சிவன்றாளைச் சிவஞான முடையார்போல்
பகர்வார் பாரில்

செற்ருர்கள் இவர்களினுஞ் சிறந்தாரிப் போலிகளாய்த்
திரியும் பாவம்
அற்ருெழிவ தெந்நாளு மிலேயென்ருே வமலனடி
யடைந்தாய் மன்ஞே.

6. தளர்ந்தவய தினிலுமுயர் சித்தாந்த சைவநெறி
தளராச் செல்வா !
களர்நிலத்திற் சிவப்பயிரை வளர்க்கவுறும் துன்பதனைக்
கருத்திற் கொள்ளாய்
அளிமிகவே யொல்லும்வகை யெல்லாமு மறிவுறுத்தி
அவனி யோர்க்குத்
தெளிவாகச் சிந்தாந்தப் படவிளக்க விருத்திதனைச்
செய்த ளித்தே.

7. படவிளக்க விருத்தியையும் வள்ளிதிரு மணப்படலம்
பகரு முண்மை
திடமாக வறிவுறுத்தச் செய்தவுரை தனையுமுயர்
தெய்வ ஆசான்
படிவமுறு தருமையினிற் குருபரன் சுப்பிரமணியப்
பண்பன் பால்வந்
தடிகேளிவ் வுரைகளேயச் சிட்டுலகுக் குபகரிக்க
வெனவீந் தாயால்.

8. சித்தாந்த சைவமிதைச் செகதலத்தில் வளர்த்தற்காம்
சிரம மெல்லாம்
வித்தகமார் ஆறுமுக நாவலவன் போலுமுயர்
மேலாம் நல்லோர்
எத்தனைபேர் அத்தனைபே ரிடத்துமங்கே முறையிட்டால்
இளைப்புப் போமோ
புத்தமுத மெனவினிக்கும் புகழுறுசச் சிதானந்தப்
பொருளாழ் தேவே.

9. மண்ணுலகில் வாழ்வார்க ளெல்லார்க்கும் சிவதீட்சை
மரபிற் செய்தாய்
விண்ணுலகில் வாழ்வார்க்கும் விதிமுறையிற் சமயமொடு
விசேட மற்றும்
பண்ணுதற்காச் சென்றனைகொல்? பகர்சச்சி தானந்தப்
பரமா! வென்றும்
எண்ணுதற்கு மரியபுகழ் பெறுவாலை யானந்த
வெங்கோ மானே.

10. பத்தரெலாந் தொழுதிரங்கச் சிவபரிபூ ரணமாகிப்
பரந்துற் ருயோ
சித்தர்கண மெதிர்கொள்ளச் சிவலோகம் சென்றங்கே
சிவணி யேயுன்
மத்தரென வுறைந்தனையோ வாலையா னந்தரெனும்
வள்ள லேநீ
புத்தமுதார் நின்வாக்காற் புனிதாத்து விதமுரைக்கப்
புவிக்கே மீள்வாய்.

# இசைத் தமிழ்ப் பண்கள் விளக்கம்.

சங்கீதம், ப. சுந்தரேசன், குடந்தை.

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே)

பண்டைய இசைத் தமிழில் முதன்முதற்றோன்றிய முதலிசையாகிய தாரத்திற்குக் கிளையிசை உழை. உழைக்குக் கிளையிசை குரல்.

மிகப்பழைய இசை முறையைப் பின்பற்றி, கிளைமுறையாகக் கணித்து அறிந்து நிறுவிய பண்டைய யாழ்க் கருவி **பேரியாழ்க் கருவி** ஒன்றே என்பதை அறியவேண்டும். இக்கருவியில் இருபத்தியொரு நரம்புகள் கட்டப்பெற்றிருந்தன. முதலேழு நரம்புகளின் பெயர் அந்தந்த இசைப் பெயர்களாலேயே கூறப் பட்டன. அதாவது,

க — உ — ங — ச — ரு — சா — எ
தாரம் — குரல் — துத்தம் — கைக்கிளை — உழை — இளி — விளரி
என்பதாம்.

இவற்றை **முதல் நிரலிசைகள்** எனவும் **மெலிவுநிரலிசைகள்** எனவும் கூறப்படுவது வழக்கு. இவ்வேழு நரம்புகளின் அளவு முறைகளை, மிகச் சிறந்த நுண்ணிய கணித வழக்கினைப் பற்றி ஆராய்ந்து நிறுவினர் நம் விபுலாநந்த அடிகளார்.

இம் முதலேழு நரம்புகள் ஒவ்வொன்றினுக்கும் செம்பாலளவில் அதாவது சரிபாதியளவில் அமைக்கப்பெற்ற ஏழு நரம்புகள் இரண்டாம் நிரலாக நின்றன. இந்நரம்புகளை எட்டு முதல் எண்ணி நிறுவவேண்டும். நரம்பின் அளவு வேறுபட்டாலும் இசைப் பெயர் மாறுபாடுறுது என்பதை உளத்தில் கொள்ள வேண்டும். இவை,

அ — கூ — ய — யக — யஉ — யங — யச
தாரம் — குரல் — துத்தம் — கைக்கிளை — உழை — இளி — விளரி
என்பதாம்.

இவற்றை **இரண்டாம் நிரலிசைகள்** எனவும் **சம நிரலிசைகள்** எனவும் கூறப்படுவது வழக்கு. இந்த ஏழு நரம்புகளின் செம்பாலளவில் வரும் ஏழு நரம்புகளை மூன்றும் நிரலாகக் கட்டப்பெற்றன. இவ்வளவு முறைகள் முதல் நிரல் அளபு முறைக்கு **வாரமாகும்.** அதாவது முழு நீளத்திற்கு நான்கிலொரு கூறு என்பதாம். எப்பொருளிலும் முழு நீள முதற் பொருளுக்குச் சரிபாதி, **செம்பால்** என்பதும், நான்கிலொரு கூறு **வாரம்** என்பதும் எட்டிலொரு கூறு **வாரச் செம்பால்** என்பவை யெல்லாம் பண்டைய தனித் தமிழ் வழக்காகும்.

இம்மூன்றும் நிரலிசைகளை பதினைந்து முதல் எண்ணி நிறுவ வேண்டும். அதாவது,

௧௫ — ௧௬ — ௧௭ — ௧௮ — ௧௯ — ௨௰ — ௨௧
தாரம்—குரல் —துத்தம்— கைக்கிளை —உழை— இளி — விளரி
என்பதாம்.

இந்நிரலில் வரும் இசைகளை மூன்றும் நிரலிசைகள் எனக் கூறுவதோடு வலிவு நிரலிசைகள் எனவும் கூறப்படுவது வழக்கு. இவை யாவற்றையும் ஒரே அடைப்பினுள் எழுதியறிதலே நலம். இசைப் பெயர்களின் முதல் எழுத்துக்களை மட்டுமே இங்கு குறிக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| தா.கு.து.கை.உ.இ.வி | தா.கு.து. கை.உ. இ.வி. | தா.கு.து.கை.உ.இ.வி. |
| மெலிவு | சமன் | வலிவு |

மெலிவு நிலைகளில் அமைந்த நரம்புகள் ஒவ்வொன்றினுக்கும் செம்பாலளபு அதாவது சரியாதியளபு, சமனிலையாகவும், சமனிலையில் அமைந்த நரம்புகள் ஒவ்வொன்றினுக்கும் செம்பாலளபு (சரிபாதியளபு) வலிவு நிலையாகவும் அமைக்கப்பெற்றன. இம்முறையைச் சுருங்கக் கூறவேண்டுமாயின், மெலிவின் இரண்டிலொரு கூறு **சமன்** எனவும், மெலிவில் நான்கிலொரு கூறு **வலிவு** எனவும் கூறவேண்டும். சமத்தின் இரண்டிலொரு கூறு வலிவு எனவும் கூறலாம்.

பழந் தமிழ்நாட்டுப் பண்டைய யாழாசிரியப் பெருமக்கள், தங்கள் தங்கள் கருவிகளில் முதலமைப்பாகக் கட்டிய நரம்பமைதிகளை நன்கோர்ந்துணர்ந்து அவற்றின் நான்கிலொரு கூறுகிய வாரத்தின் அமைதிமுறையறிந்து நரம்புகளை ஒரே கருவியிலேயே கட்டியும், முதலமைப்பிற்கு, இரண்டிலொரு கூறுகிய செம்பாலின் அமைதியையும் அதே கருவியில் நடுநிலையாகக் கட்டியும், மெலிவு நிலையில் அமைந்த முதநரம்பினொலியும் வலிவு நிலையிலமைந்த இறுதி நரம்பினொலியும் மக்களால் நன்கு கேட்டு உணருமாறு செய்தமையால், அப்பெருமக்களாலேயே நரம்புகள், நீளத்தில் மிகுந்து செல்லச்செல்ல ஒலி குறைந்து (மெலிந்து) வரும் என்பதையும், நரம்புகளின் நீளம் குறுகிச் செல்லச்செல்ல ஒலி நிறைந்து (வலிந்து) வரும் என்பதையும் நன்கறிந்து ஓர்ந்து உணரப்பெறுவதாயிற்று.

வலிவின் எல்லையை மெலிவிலிருந்து கண்டு பின்னர் இடைப் பகுதியினை சமப்படுத்தியறிந்த பண்டைய யாழாசிரியர்களை, முத்தமிழ்த் துறை போகிய முனிபுங்கவராம் நம் இளங்கோவடி

கள், "வலிவும் மெலிவும் சமனும் எல்லாம் பொலியக்கோத்த புலமையோன்" என விதந்து பாராட்டினர்.

இவ்வாறமைந்த பண்டைய யாழ்க் கருவிகளிற் சிறந்ததும் பெரியதுமாகிய பேரியாழில் அமைக்கப்பெற்ற மூவகை நிலைகளில், எல்லா இசைகளுக்கும் முற்றோன்றிய தாரமும் அதன் கிளையாகிய உழையும் மெலிவு நிலையில் நின்று உழையின் கிளையாகிய குரல் சமநிலையில் இரண்டாமிசையாய் நின்றது. இக் குரல் நரம்பு தாரத்திற்குக் கிளையின் கிளையாயிற்று. இக்குரல் நரம்பின் நீளத்தினை அருட்டிரு விபுலாநந்த அடிகளார் தனது யாழ்நூலில் ஒருவகை முறையில் முப்பத்தியாறு விரல் நீளமென வரையறை செய்தார். அம்முறையில், சமநிலைக் குரல் நரம்பின் நீளம் முப்பத்தியாறு விரல் என்றால் இதன் இருமடங்காம் எழுபத்தியிரண்டு விரல் நீளம் மெலிவு நிலைக்குரல் என்றும், முப்பத்தியாறின் செம்பாலாகிய பதினெட்டு விரல் நீளம் வலிவு நிலைக்குரல் என்றும் ஊகித்தறியவேண்டும். நிற்க.

இசைகளின் தோற்றமுறையில் குரல் முதலாக ஐந்திசைகள், குரல் — துத்தம் — உழை — இளி — தாரம் எனவமையும். இந்நிரலில் குரல் எனும் இசையைத் தொடக்க இசையாகக் கொள்ள மற்றைய இசைகளின் அலகு நிலைகளைத் கணித்தறிந்த முறையில் எழுதியறியவேண்டும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குரல் | — | துத்தம் | — | உழை | — | இளி | — | தாரம் |
| 0 | — | ௪ | — | ௫ | — | ௪ | — | ௫ |

இவ்வமைப்புடைய இப்பண் மிகப் பழங்காலத்தில் குரற்பண் எனப்பட்டு பிற்காலத்தில் செந்திறம் எனப்பட்டுப் பின்னர் செந்துருத்தி எனவும் கூறப்படுவதாயிற்று. இப்பண்ணின் அடைவு முறைகளை தற்கால விளக்கத்துடன் அடைப்பினுள்ளெழுதிக் காட்டுவோம். (238-ஆம் பக்கம் பார்க்க)

பழைய கால இசைத்தமிழ் முறையிலமைந்த குரற்பண், பிற்காலத்தில் செந்திறம் எனவும் செந்துருத்தி எனவும் கூறப்பட்டு, அதனலகு முறைகளை தற்கால இசையமைதிக்கேற்ப நோக்குமிடத்து மத்யமாவதி இராகம் என்பது நன்கறிந்துணரக் கிடக்கின்றது. இப்பண்ணிற்கிலக்கியமாக நம் தேவாரச் செழும் பாடல்களில், (சுந்தரர் பாடியருளிய பதியங்களில்) மீளாவடிமை என்ற பதியமொன்றுமட்டும் இன்றளவும் அழியாது வழக்கில் இருந்தே வருகின்றது.

| பழங்காலப் பெயர் | | பண் ௫ | தற்காலப் பெயர் |
|---|---|---|---|
| குரற்பண் | | இடைக்காலப் பெயர் செந்திறம் எனும் செந்துருத்தி | மத்யமாவதி |
| கிளையின் கிளை நிரல் | அலகுகள் | தற்காலச் சுருதிப் பெயர்கள் | தற்கால இசைப் பெயர்கள் |
| குரல் | 0 | ஆதார சுருதி | ஷட்ஜம் |
| துத்தம் | ௪ | நான்கு சுருதிகள் இதனைச் சேர்த்து | சதுச்ருதிருஷபம் |
| உழை | ௫ | ஒன்பது சுருதிகள் இதனைச் சேர்த்து | சுத்தமத்யமம் |
| இளி | ௪ | பதின்மூன்று சுருதிகள் இதனைச் சேர்த்து | பஞ்சமம் |
| தாரம் | ௫ | பதினெட்டு சுருதிகள் இதனையும் சேர்த்து | கைசிகிநிஷாதம் |
| மேனிலைக் குரல் | ௪ | இருபத்திரண்டு சுருதிகள் | மேனிலைத் தாரஷட்ஜம் |

இனி இப்பண்ணின் இசைகளை அடக்கிய ஏழிசைகளாகக் கொள்ளும்முறைவழித் தோன்றும் பெரும்பண்ணையும் காணலாம். பின்னர் கண்டுணரப்பெற்ற **கைக்கிளை விளரி** எனுமிரண்டிசைகளைச் சேர்த்துக் காண, **குரல் — துத்தம் — கைக்கிளை — உழை — இளி — விளரி — தாரம்** எனவமைந்து நிற்பதை யறியலாம் இதனலகு நிலைகள்,

குரல்—துத்தம்—**கைக்கிளை**—உழை—இளி — **விளரி** — தாரம்
0 — ௪ — ௪ — ௧ — ௪ — ௪ — ௧

என நிற்பதால் யாவற்றையும் அடைப்பினுள்ளெழுதியறிவோம்.

(239-ஆம் பக்கம் பார்க்க)

ஆக, செம்பாலை என்ற பெரும்பண் பழங்காலத்தில் குரற் **பெரும்பண்** எனவும் கூறப்பட்டிருத்தல் கூடும். அத்தகைய செம்பாலை இக்காலம் **அரிகாம்போதி** என்ற பெயருடன் நம் தென்னிந்திய இசைக் கலையில் நன்கு விளங்கி வருவதை அறியலாம். இதன் தோற்றுவாய் முறை மிகப்பழங்காலத்தில் குரல்

| பழங்காலப் பெயர் | | பண் சூ | தற்காலப் பெயர்கள் |
|---|---|---|---|
| குரற்பெரும் பண் செம்பாலை | | இடைக்காலப் பெயர்கள் பற்பலவாக உள்ளன | அரிகாம்போதி |
| கிளையின் கிளை நிரல் | அலகுகள் | தற்காலச் சுருதிப் பெயர்கள் | தற்கால இசைப் பெயர்கள் |
| குரல் | 0 | ஆதார சுருதி | ஷட்ஜம் |
| துத்தம் | ௪ | நான்கு சுருதிகள் இதனைச் சேர்த்து | சதுச்ருதிருஷபம் |
| கைக்கிளை | ௪ | எட்டு சுருதிகள் இதனைச் சேர்த்து | அந்தரகாந்தாரம் |
| உழை | ௧ | ஒன்பது சுருதிகள் இதனைச் சேர்த்து | சுத்தமத்யமம் |
| இளி | ௪ | பதிமூன்று சுருதிகள் இதனைச் சேர்த்து | பஞ்சமம் |
| விளரி | ௪ | பதினேழு சுருதிகள் இதனைச் சேர்த்து | சதுச்ருதிதைவதம் |
| தாரம் | ௧ | பதினெட்டு சுருதிகள் இதனையும் சேர்க்க | கைசிகிநிஷாதம் |
| மேனிலைக் குரல் | ௪ | இருபத்திரண்டு சுருதிகள் | மேனிலைத் தாரஷட்ஜம் |

தாரமாய செம்பாலை எனக் கூறப்பட்டிருக்கவேண்டும். இது போன்றே குரல் தாரமாய ஐந்திசைப் பண்ணும் **குரற் பண்** எனக் கூறப்பட்டிருக்கலாம்.

பின்னர் பல்வேறு முறையில் உணர உணர இப்பாலை, குரல் குரலாய செம்பாலையெனத் தார முறையிலும், கைக்கிளை குரலாய செம்பாலை எனக் குரன் முறையிலும், தாரங் குரலாய செம்பாலை யென இளிமுறையிலும் கூறுவது வழக்கமாயிற்று.

பேரியாழிற் கட்டிய நரம்பமைதிகள் முதன்முதற்றோன்றிய தார முறையாகும். இத்தார முறையையே பிற்கால உரையாசிரியர்கள் **தாரக்கிரமம்** என்றனர். தாரத்திற்குக் கிளை நரம்பாகிய உழை முறையை பண்டைய காலத்தில் **பாலையாழ்** என்ற கருவியில் தனித்துக்கட்டி ஆராய்ந்துள்ளனர். பின்னர் உழைக்குக்

சென்ற இதழின் தொடர்ச்சி

# தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டாராய்ச்சி.

**S. திருஞானசம்பந்தன் M. A.,**
வரலாற்று விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

## 6. விக்கிரம சோழன் திருவாசல்.

தஞ்சைப் பெரியகோயிலின் அர்த்தமண்டபத்தின் தெற்குத் திருவாயில் விக்கிரம சோழன் திருவாசல் என்ற பெயருடையது என்பது கல்வெட்டால் அறியப்படுகிறது. அதன் பெயர்க் காரணம் விளக்க வந்த கட்டுரையாளர் 'அது விக்கிரம சோழனால் கட்டப்பெற்றதோ அல்லது இவன் பெயரால் வைக்கப் பெற்றதோ என்று துணிந்து கூறுவதற்கு ஆதாரமில்லை' என வரைந்துள்ளனர். அதனை ஈண்டு ஆராய்வோம்.

விக்கிரம சோழன் என்பான் முதல் குலோத்துங்க சோழனுடைய மகன்; கங்கைகொண்ட சோழபுரத்தைத் தன் தலைநகரமாகக்கொண்டு கி. பி. 1120 முதல் 1136 வரையில் சோழ இராச்சியத்தில் சக்கிரவர்த்தியாயிருந்து அரசாண்டவன். அவன் தன் ஆட்சிக்காலத்தில் தில்லைச் சிற்றம்பலவாணரது திருக்கோயிலில் பல திருப்பணிகள் புரிந்தமையை அவனது மெய்க்கீர்த்தி மிகத்தெளிவாகப் புலப்படுத்துகின்றது. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு அவன் செய்த திருப்பணியொன்றும் அம்மெய்க்கீர்த்தியில் காணப்படவில்லை. எனவே, அவன் தன் ஆட்சியில் அங்கு ஒரு திருப்பணியும் செய்யவில்லை என்பது தேற்றம். தஞ்சைப் பெரியகோயிலை எடுப்பித்த இராசராச சோழன் கி. பி. 1010 ஆம் ஆண்டில் திருப்பணி முழுவதும் நிறைவேறியவுடன் அத்திருக்கோயிலுக்குக் கடவுண்மங்கலம் செய்தான். அக் கோயில் கருவறையின் முன்னுள்ள அர்த்தமண்டபத்தின்

---

239-ம் பக்கத் தொடர்ச்சி.

கிளை நரம்பாய குரல் முதலாகவமையும் குரல் முறையை குறிஞ்சியாழ் என்றதொரு சிறந்த கருவியில் தனித்துக்கட்டி ஆராய்ந்துள்ளனர். கால வகையில் தண்டமிழ்நாட்டுக் குறிஞ்சி நில மக்களால் குறிஞ்சியாழ்க் கருவி மிக மிகச் சிறப்படைந்த காலத்தே அக்கருவியோடு குரல் முதலாய ஏழிசைகளமைதி நாட்டில் பெருக வளர்ந்து வரத் தொடங்கியது. இவ்வமைதி நெடுங்காலம்வரை வழக்கில் இருந்ததால், ஏழிசை என்றதுமே அவை, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்பவையேயாம் எனும் கருத்து மிகவும் வேரூன்றியது. ஆதலினாலே குரல் முதலாக வரும் நிரல் வகையை குரற் கிரமம் எனப் பிற்கால உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டினர். இதன் அலகு நிலைகளைப் பின்னரும் விளக்குவேம். (தொடரும்)

வடக்குத் திருவாசலும் தெற்குத் திருவாசலும் அவ்வேந்தன் கோயில் கட்டிய காலத்திலேயே அமைக்கப்பெற்றவை என்பதை அவற்றின் அமைப்பினால் நன்கறிந்துகொள்ளலாம். எனவே, அர்த்தமண்டபத்தின் தெற்குத் திருவாயில் விக்கிரம சோழன் புதியதாகக் கட்டியதன்று என்பது திண்ணம். இத்திருக்கோயில் தோன்றியதற்கு 110 ஆண்டுகளுக்குப் பிறகு பட்டம் பெற்றுக் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து அரசாண்ட விக்கிரம சோழன் பெயரை இக்கோயிலிலுள்ள ஒரு திருவாசலுக்கு வைத்து வழங்குவதற்கு ஏதுவும் இயைபும் இல்லை. ஆகவே, கட்டுரையாளரின் கருத்து சிறிதும் பொருந்தாமை அறியத்தக்கதாகும்.

இனி, அர்த்தமண்டபத்தின் தெற்குத் திருவாயில் 'விக்கிரம சோழன் திருவாசல்' என்ற பெயரை எங்ஙனம் எய்தியது என்பது ஆராய்தற்குரியதாகும்.

திருவிசைப்பாப் பதிகம் ஒன்று பாடியுள்ள முதல் கண்டராதித்த சோழருடைய புதல்வனும் இராசராச சோழனுக்கு முன்னர் கி. பி. 970 முதல் 985 வரையில் தஞ்சைமாநகரிலிருந்து ஆட்சி புரிந்தவனும் ஆகிய உத்தம சோழன் விக்கிரம சோழன் என்ற சிறப்புப்பெயருடையவன் என்பது சில கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது.[1] அன்றியும், இராசராச சோழனுடைய புதல்வனாகிய கங்கைகொண்ட சோழன் விக்கிரம சோழன் என்ற சிறப்புப்பெயர் பெற்றவன் என்பது திருவாலங்காட்டுச் செப்பேடுகளால்[2] அறியக்கிடக்கின்றது. இராசராச சோழன் தன் சிறிய தந்தையாகிய உத்தம சோழன்பால் பேரன்புடையவனாதலின் விக்கிரம சோழன் என்னும் அவனது சிறப்புப் பெயரைத் தன் புதல்வனுக்கு வழங்கியமையோடு அவ்வேந்தனது பெயர் என்றும் நின்று நிலவுமாறு இராசராசேச்சுரத்தில் திருவணுக்கன் திருவாயிலுக்கு அண்மையில் அர்த்தமண்டபத்தின் தென்புறத்திலுள்ள திருவாசலுக்கும் விக்கிரம சோழன் திருவாசல் எனப் பெயரிட்டுள்ளனன். பல திருக்கோயில்களுக்கு அரிய திருப்பணிகள் புரிந்து கி. பி. 1001ல் இறைவன் திருவடியையடைந்த செம்பியன் மாதேவியாரைக் குறிப்பிடும் இராசராச சோழன் காலத்துக் கல்வெட்டுக்கள், 'ஸ்ரீ உத்தம சோழதேவரைத் திருவயிறுவாய்த்த ஸ்ரீ செம்பியன் மாதேவிப் பிராட்டியார்' எனவும், 'ஸ்ரீ உத்தம சோழ தேவர் தங்களாச்சியார் ஸ்ரீ பராந்தகன் மாதேவடிகளாரான ஸ்ரீ செம்பியன் மாதேவியார்' எனவும் உத்தம சோழனைப் புகழ்ந்து கூறுவதைக்

(1) Ins. Nos. 164—170 of (2) S. I. I., Vol. III, No. 205,
(3) I baid, Vol. XIII, Nos. 14,72,144 and 170 1928-29.

காணலாம்.[3] ஆகவே, இராசராச சோழன் உத்தமசோழனிடத்தில் எத்துணை அன்பும் மதிப்பும் வைத்திருந்தனன் என்பது தெள்ளிது. எனவே, இராசராச சோழன் காலஞ்சென்ற தன் சிறிய தந்தையாகிய உத்தமசோழன் சிறப்புப்பெயரையே தான் அமைத்த இராசராசேச்சுரத் திருக்கோயிலில் அர்த்தமண்டபத்தின் தெற்குத் திருவாயிலுக்கு வழங்கியுள்ளான் என்பது தேற்றம்.

கட்டுரையாளர் 'இவ்விழாக் காலங்களில் இராசராச நாடகம் நடத்தப்பெறுவதுண்டு' என்று எழுதியுள்ளனர். அதுவும் ஆராய்தற்குரியதாகும்.

இராசராச நாடகம் என்ற பெயருடைய நாடகமே இல்லை. திருப்பூந்துருத்தியிலுள்ள ஒரு கல்வெட்டால்[1] 'இராசராச விஜயம்' என்ற நூல் ஒன்று இருந்தது என்று தெரிகிறது. அது நாடக நூல் அன்று; முதல் இராசராச சோழனது வரலாற்றைக் கூறும் நூலாகும். தஞ்சைப் பெரியகோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு,[2] வைகாசிப் பெரிய திருவிழாவில் இராசராசேசுவர நாடகம் நடத்திவந்த சாந்திக்கூத்தன் திருவாலன் திருமுதுகுன்றனுக்கும் அவன் வர்க்கத்தினர்க்கும் ஆண்டுதோறும் நூற்றிருபது கலம் நெல் அளித்து வருமாறு அரசன் செய்த ஓர் உத்தரவை உணர்த்துகின்றது. அக்கல்வெட்டு, 'தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்' இரண்டாம் தொகுதியில் அச்சிடப்பெற்று வெளிவந்துளது. அதைத் தவிர நாடகத்தைப்பற்றிக் கூறும் கல்வெட்டு அக்கோயிலில் வேறு ஒன்றுமில்லை. எனவே, தஞ்சைப் பெரியகோயிலில் வைகாசிப் பெரிய விழாவில் நடைபெற்று வந்தது இராசராசேசுவர நாடகமேயன்றி இராசராச நாடகம் அன்று என்பது நன்கு தெளியப்படும். ஆராய்ச்சியாளர் இராசராசேசுவர நாடகத்தை இராசராச நாடகம் என்று எழுதியிருப்பது வெளிவந்துள்ள அக்கல்வெட்டை ஊன்றிப் படிக்காமையால் நேர்ந்த பிழையேயாகும்.

இராசராச விஜயம், இராசராசேசுவர நாடகம் ஆகிய இரண்டு நூல்களும் இக்காலத்தில் கிடைக்கவில்லை.

(தொடரும்)

(1) Annual Report on South Indian Epigraphy for 1930–31, part II, para 12.

(2) S. I. I., Vol. II, No. 67.

சென்ற இதழ் 213ஆம் பக்கம் 33ஆம் வரியில் "அப்பெரியோர்கள் நிலவிய காலங்களில்" என்பதன்பின் "தில்லைச் சிற்றம்பலத்திற்கு அப்பெயர்வழங்கவில்லை என்பது தேற்றம். இந்நிலையில்" என்ற தொடரைச் சேர்த்துக்கொள்க.

# இயற்கைக் காட்சி.

பண்டித. வித்துவான், தி. சங்குப் புலவர்.

## அகவற் பா.

உலக யியற்கை யுணர்வுடை யீரே !
பலகலை கற்ற பண்புடை யீரே !
என்னே யுலகத் தியற்கைக் காட்சி
சொன்னால் வியப்பு மருட்சியுந் தோன்றும்
புல்லு மரமு மோரறி வினவெனத்
தொல்காப் பியர்முதற் பலருஞ் சொல்லினர்
நெருஞ்சிச் செடியு மவ்வின மென்பது
தெரிந்தது தானதன் செய்கையென் சொல்வேன்!
திண்ணிய கற்பிற் சிறந்தா ளொருத்திதன்
கண்ணுக் கினிய காதலன் முகத்தைச்
சென்ற திசையெலாந் திரும்பித் திரும்பி
நின்றுநோக் குவதுபோ லிந்த நெருஞ்சியும்
பருவ மறிந்துதன் பன்மல ராகிய
திருமுக மலர்த்துஞ் செங்கதி ரோனைக்
காலையிற் கிழக்கே கவிந்து நோக்கும்
மாலையின் மேற்கே வளைந்து நோக்கும்
நேர்நடுப் பகலி னிமிர்ந்துமே னோக்கும்
பார்வையை யாரே படைத்தா ரதற்குக்
கூர்மை யறிவு கொளுத்தினர் யாவர்
சீர்மையோ டாய்ந்து செப்புவிர் புலவீர் !
தொட்டாற் சுருங்கி யென்றே மக்கள்
இட்ட பெயர்பெற் றிருக்கு மொருசெடி
அச்செடி நிகழ்த்துஞ் செய்கை யறிவீர்
பச்செனத் தழைத்துப் படர்ந்திருக் குங்கை
தொட்டா லும்மெய் துணுக்கென மேலென்
பட்டா லும்நனி பதைத்துட னடுங்கிச்
செத்தது போலக் கிடக்குஞ் சிலகணம்
சற்றுநே ரத்தின் முற்றுந் தழைக்கும்
அடுத்துப் பின்னு மதனைத் தொடினும்
படினு மவ்வாறே பலமுறை நிகழ்த்தும்
எச்செடி யெம்மரத் தினுமிலா வியற்கை
இச்செடி யின்பா லிருப்பது வியப்பே.

### எறும்பு

எறும்பி னியற்கை யெங்ஙனம் புகல்வேன்
நறுஞ்சுவை யுணவி னுற்ற மறியும்
மோப்ப வழியே முன்பின் னாகக்
கோப்பது போலக் கூடிச் செல்லும்
அரிசிமுத லுணவை யறிந்துவாய் கௌவி
வரிசையிற் கொண்டுபோய் வைக்கும் வளைக்குள்

மழைநீ ருட்புகா வண்ணம் பூமியை
யழகாய்த் துளைத்து வளைமனை யமைக்கும்
மழைக்கா லம்வெளி வரமுடி யாதென
வுழைப்பா லுணவை யுள்ளிடஞ் சேர்க்கும்
திட்டமாய் மழைவரு மென்னத் தெரிந்து
முட்டை கொண்டு திட்டை யேறும்
வெண்ணெய் தயிர்மோர் வெல்லங் கரும்புதேன்
எண்ணெ யிவைமே லெங்கிருந் தாலும்
நாற்றம் வந்த வழியை நணுகி
யேற்ற மரிதெனு தெத்துணை யுயரம்
என்னினுஞ் சென்றங் கிடைவி டாமலே
துன்னிமொய்த் தவற்றைத் துய்ப்பதற் காகவே
மெள்ள நெருங்கி விரைந்துவாய் வைக்கும்
உள்ளே விழுந்துதம் முயிரையும் போக்கும்
புழுமுதற் பலவகைப் பூச்சியா முணவை
வழுவா திழுத்து வளைக்குட் செலுத்த
ஓரெறும் பான்முடி யாதென வுணர்ந்தாற்
சீருட ளுங்கே திகைத்து நின்றுபின்
சிலவும் பலவு மொன்ருய்ச் சேர்ந்து
குலவி யிழுத்துக் கொண்டுபோய்ச் சேர்க்கும்
சிதலு மெறும்பு மூவறி வினவென
முதலிற் றெல் காப்பியமுனி மொழிந்தது
பிழையென் ருலும் பின்னூல் நன்னூல்
உழையுமவ் வாறே யுரைத்தது மென்னே
கண்ணறி வின்றெனி லுணவைக் காண
ஒண்ணுமோ வரிசையி லொன்ருய்க் கூடிக்
குறுக வியலுமோ குருடரிவ் வாறு
மறுகிற் செல்லும் வழக்க முண்டோ
ஓசை யறிந்தே யொருவரோ டொருவர்
பேசிச் செலினும் பிழைபடு மன்றே
ஊமை செவிடு குருடும் முடைய
தீமை மனிதர் சிலர்பலர் சேர்ந்தே
போர்க்கா லத்தி லோரிடங் கூடி
யோர்தொழில் செய்திட வொண்ணுமோ வெறும்புகள்
எப்படிக் கூடியோர் பொருளை யிழுத்துத்
தப்பாது வளைக்குட் டாஞ்சேர்க் கின்றன.
பகுத்தறி வின்றெனி லுணவைப் பாங்காய்த்
தொகுத்துவைத் திருப்பதுந் துய்ப்பது மெப்படி
கார்கா லத்தைக் கருதிக் கோடையிற்
சீர்பெற வுணவைச் சேர்ப்பது மெப்படி
என்றே யைய மெவர்க்கு முள்ளெழும்
நின்றது தெளியு நீர்மைக் கிடமிலை. (தொடரும்)

# மதிப்புரை.

**பாவைக் கூத்து :-** ஆசிரியர்: "புற்றன்", புதுடில்லி.

தேனென இனித்துத் திருவருள் சேர்க்கும் திருவாசகப் பொரு ணூல் ஆசிரியர் செய்த திருவெம்பாவையின் உட்பொருள் விளக்கும் முகத்தான் நாடக முறையில் எழுதிய சிறு உரையாடல் நூலாகும். அனைவரும் சுவைத்துணரும் வகையில் ஆழமும், அழகும், மிளிரச் செய்துள்ளார் ஆசிரியர். படித்துப் பயன்பெறுக.

**மூக பஞ்ச சதீ :-** ஆசிரியர் : கவியரசு, கு. நடேச கவுண்டர்.
விலை 75 காசுகள்.

ஸ்ரீ மூக மகா கவி வடமொழியில் இயற்றிய ஐந்நூற்றுள், திரு முறுவல் நூறு (மந்தஸ்மித சதகம்) திருவடித்தாமரை நூறு (பாதார விந்த சதகம்) என்ற இருநூறுகளைச் செந்தமிழின் திறன் விளங்கச் செய்யுள் நடையில் யாத்துள்ளார் இதன் ஆசிரியர். தெளிவும் சுவையும் திருவருள் நெறியோடு கூடிச்செல்லும் இச்சீரிய நூல் அருள் விரும்பும் அன்பர்கள் அகத்தை இன்புறுத்தும் எனக் கருது கின்றோம்.

**குழந்தையுள்ளம் :-** முதல் மலர்.
ஆசிரியர் : நல்லைக்கவி, அ. இளங்கோவன்.
விலை 20 காசுகள்.

சிறுர்கள் உள்ளத்திலே பதியும் தீந்தமிழ்ச் சந்தப் பாடல்கள் மூலம், அவர்தம் ஒழுக்கம், அறிவு, காட்சி ஆயவற்றை நன்னெறியில் தூண்டுகிருர் இதன் ஆசிரியர்.

**கர்ப்பிணிகளுக்கு அவசியமான சில போதனைகள் :-**
ஆசிரியர் : டாக்டர் ரெ. கோ. கிருஷ்ணன், எப்.ஆர்.ஸி.எஸ்., சென்னை.
விலை 50 காசுகள்.

அன்னையாம் பேறு பெறும் முன்னை நிலையில் பெண்கள் எண்ணி ஒழுகவேண்டிய இன்றியமையாத சில கருத்துக்களை, இனிய, எளிய தமிழில், மேற்புல மருத்துவர்கள் கருத்தோடிணங்கி எழுதி யுள்ளார் இதன் ஆசிரியர். உணவு, உடை, உறக்கம், முதலியவற் ருல் உடலைப் பேணவேண்டிய முறை; ஒளி, உறைவிடம், உலாவல், முதலிய சூழ்நிலைகளை ஆக்கிக்கொள்ளும் வகை; எண்ணல், இயற்றல், இயம்பல் முதலியவற்றைக் கையாளும் நெறி; ஆகியவற்றைச் சுருக்கித் தெளிவாக உணர்த்துவதோடு, பிள்ளைப் பேற்றின் பின் நடக்கவேண்டிய முறையையும் விளக்கியுள்ளார். கருவுற்ற மாதர் கையில் இருக்கவேண்டியதொரு நூலாகும் இது.

**மதுரை எழுத்தாளர் சங்கச் சிறப்பு மலர் :-**

மொழி, இலக்கியம், கலை, அரசியல், வரலாறு முதலிய பல பொருள்களையும் பற்றி, மு. வ. முதலிய முப்பதுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் எழுதியுள்ளார்கள். இளம் எழுத்தாளர்கள் முன் னேற வாய்ப்பளிக்கும் இச்சங்கத்தார் முயற்சி பாராட்டத்தக்கது.